 Registered as a Newspaper


# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 மாசி 15 ஞாயிற்றுக்கிழமை (27-02-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:79


# புதன்கிழமை முதல் மீன்பிடிக்க அனுமதி

## நேற்று இணக்கம் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், பெப்ரவரி 27**

**யாழ்குடாக் கடலேரியில் எதிர்வரும் புதன்கிழமை முதல் மீன்பிடிப்பதற்கு படையினரால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.**

**யாழ்.நகரில் உள்ள 512 ஆவது படைப்பிரிவில் நேற்று நடைபெற்ற மாநாடு ஒன்றில் இது தொடர்பாக இணக்கம் தெரிவிக்கப்பட்டது.**

இந்த மாநாட்டில் 51 ஆவது படையணித்தளபதி காமினி ஜெயசுந்தர, 512ஆவது படையணியைச் சேர்ந்த கேணல் மாசக்கர, ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கே.வி.குகேந்திரன் (ஜெகன்), வலி. மேற்கு பிரதேச சபைத் தலைவர் ந.திரிலோகநாதன், கொழும்புத்துறை, பாஷையூர், குருநகர் இராணுவ முகாம் பொறுப்பாளர்கள், கடற்படை அதிகாரிகள், கொழும்புத்துறை, அரியாலை, குருநகர், பாஷையூர், நாவாந்துறை மீனவர் சங்கப் பிரதிநிதிகள், கடற்றொழில் கூட்டுறவுச் சங்க சமாசப் பிரதிநிதிகள், கடற்றொழில் திணைக்களப் பிரதிநிதி ஆகியோர் கலந்துகொண்டனர்.

குடாக்கடலேரியில் புதன்கிழமை தொடக்கம் மீன்பிடிக்க அனுமதிக்கப்பட்டுள்ளதையடுத்து இன்று

(12 ஆம் பக்கம் பார்க்க)

# பிரதிஅமைச்சர் சாந்த பிரேமரட்ண நேற்று கிரனேட் வீச்சில் காயம்!

## தாக்குதல் நடத்தியவர்கள் தப்பிவிட்டனர்

கொழும்பு,பெப்.27

நேற்று நடத்தப்பட்ட கிரனேட் தாக்குதல் ஒன்றில் திட்ட அமுலாக்கல் நாடாளுமன்ற விவகாரத்துறை பிரதிஅமைச்சர் சாந்த பிரேமரட்ண காயமடைந்தார்.

மிகிந்தலை விகாரைக்கு அருகில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இருவர் தாக்குதல் நடத்தினர் என்றும் அவர்கள் தப்பிச்சென்றுவிட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

நேற்றுக்காலை 10.00 மணியளவில் மிகிந்தலையில் அமைக்கப்பட்டுவரும் விஜயகுமாரதுங்கவின் உருவச்சிலையைப் பார்வையிட பிரதிஅமைச்சர் சென்ற சமயம் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இரு கிரனேட்டுக்கள் வீசப்பட்டன என்றும் அவற்றில் ஒன்றே வெடித்தது என்றும் மற்றையது பின்னர் பாதுகாப்பாகச் செயலிழக்கச் செய்யப்பட்டது என்றும் கூறப்பட்டது.

காயமடைந்த அமைச்சர் மிகிந்தலை ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்ற பின்னர் வீடு திரும்பினார்.

## தப்பிச்சென்ற படையினருக்கான பொதுமன்னிப்பு இன்று நள்ளிரவுடன் முடிவு

கொழும்பு, பெப்.27

இராணுவத்தில் இருந்து தப்பி ஓடிய படையினர் மீண்டும் படையில் இணைவதற்கு வழங்கப்பட்ட பொது மன்னிப்புக் காலம் இன்று நள்ளிரவுடன் முடிவடைகின்றது.

கடந்த 21 ஆம் திகதி முதல் வழங்கப்பட்ட இந்த ஒரு வார பொதுமன்னிப்புக் காலத்தில் 507 படையினர் கடமைக்கு திரும்பி உள்ளனர் என்று பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் ஆதரவைப் பெறாமல் அரசமைப்பை திருத்த வேண்டாம்!

## ஜனாதிபதிக்கு ரணில் கடிதம்

**கொழும்பு,பெப்ரவரி 27**

**விடுதலைப் புலிகளின் ஆதரவைப் பெறாமல் அரசமைப்பில் திருத்தங்களைக் கொண்டுவர வேண்டாம் என்று ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்திடம் கோரி உள்ளது.**

**ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று அனுப்பி வைத்த கடிதத்திலேயே மேற்கண்ட கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.**

நாட்டில் உள்ள அனைத்துத் தரப்பினரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வு ஒன்று காணப்பட்ட பின்னரே அரசமைப்பில் திருத்தத்தை கொண்டுவரமுடியும் என்று ரணில் விக்கிரமசிங்க அந்தக் கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

தேர்தல்கள், அரசாங்க சேவை, பொலிஸ் சேவை, நீதிச்சேவை போன்றவற்றில் மாற்றங்களைக் கொண்டுவருவதற்காக சுயாதீன ஆணைக்குழுக்களை ஏற்படுத்துவதற்கான யோசனைகளையும் ரணில் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் வடக்கு - கிழக்கு மோதலுக்கு தீர்வுகாணும் செயற்பாடுகள் என்ற தலைப்பில் ஐ.தே.க. சார்பில் முன்வைக்கப்பட்ட குறிப்பு ஒன்றையும் தனது கடிதத்துடன் ரணில் இணைத்துள்ளார்.

புதிய அரசமைப்பைத் தயாரிப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி



பொது மன்னிப்பு என்ற சொல்லுக்கே அர்த்தம் இல்லாமல் போகப்போகுது....!

# ஒஸ்லோ பேச்சு மார்ச்சில்?

கொழும்பு,பெப்.27

இலங்கை இனப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கோடு இலங்கை அரசுக்கும் புலிகளுக்கும் இடையே நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் அடுத்த மாதம் பேச்சு நடைபெற இருப்பதாக கொழும்புப் பத்திரிகை ஒன்றை ஆதாரம் காட்டி இந்திய வானொலி செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தப் பேச்சுக்களில் இலங்கை அரசின் சார்பில் மூன்று பிரதிநிதிகள் கலந்துகொள்வார்கள் என்றும் செய்தித்துறை அமைச்சர் மங்கள சமரவீர அரச தரப்புக்கு தலைமை வகிப்பார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏனைய இருவரும் இந்தியத் தூதர் மங்கள முனசிங்க, வெளியுறவுத்துறைச் செயலர் லயனல் பெர்ணாண்டோ ஆகியோர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-6)

# புலிகளுடன் மட்டும் பேச 4 தமிழ்க் கட்சிகள் ஆதரவு

கொழும்பு,பெப்.27

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் நோர்வே அரசு மேற்கொள்ளும் சமாதான முயற்சிகளில் தமிழ்மக்களின் ஏக பிரதிநிதிகளாக புலிகளுடன் மட்டுமே அரசு பேச்சு நடத்தவேண்டும் என்றால் அதற்கு நாம் இடையூறாக இருக்கப்போவதில்லை என்று 4 தமிழ்க் கட்சிகள் தெரிவித்துள்ளன.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு புலிகளின் பங்களிப்பு பாரியதாகும். இதனை எவரும் மறுக்க முடியாது. தீர்வுக்கு புலிகளுடன் மட்டுமே பேச வேண்டும் என்ற நிலை ஏற்படின் நாம் ஒதுங்கி விலகி நிற்கத் தயங்கமாட்டோம் என்று தமிழர் விடுதலைக்கூட்டணி செயலாளர் நாயகமும் எம்.பியுமான ஆர். சம்பந்தன் தெரிவித்தார்.

புலிகளின் தியாகங்களையும் எமது தியாகங்களையும் ஒருபோதும் ஒப்பிடமுடியாது. புலிகள் ஜனநாயக நீரோட்டத்துக்கு வரும்பட்சத்தில் அதற்கு போட்டியாக நாம் நிற்கமாட்டோம், தேர்தலில் அவர்கள் போட்டியிட்டால் எனது வாக்கையும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# மட்டக்களப்பில் நாளை சமாதானப் பேரணி

ஈ.பி.டி.பி., புளொட், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ். ஆகிய கட்சிகளும் 13 பொது அமைப்புகளும் இணைந்து நடத்தும் சமாதானத்துக்கான மக்கள் பேரணி நாளை மட்டக்களப்பில் நடைபெறவுள்ளது.

நோர்வே அரசின் சமாதான முயற்சிகள் சீர்குலைக்கப்படாமல் அரசும் - புலிகளும் பேச்சு நடத்தி நல்லதொரு தீர்வை ஏற்படுத்த வேண்டும் என்று கோரியும் -

மட்டக்களப்பில் அமுல் செய்யப்படவுள்ள பிரயாண அனுமதிப்பத்திரம் வழங்கும் முறையை இரத்துச் செய்யக்கோரியும் - இந்தச் சமாதானப் பேரணி நடைபெறவுள்ளது.

இந்தப் பேரணி நாளைக் காலை 9 மணிக்கு மட்டக்களப்பு அரசடிச் சந்தியிலிருந்து ஆரம்பமாகி மகாத்மாகாந்தி சிலை அருகே முடிவடையவுள்ளது.

பேரணியின் இறுதியில் சமாதானத்தை வலியுறுத்தி ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றும் அனுப்பி வைக்கப்படவுள்ளது. (இ-5)

## கஞ்சிகுடிச்சாறில்

# புலிகளின் கட்டுப்பாட்டு பகுதியில் படைநடவடிக்கை

கொழும்பு,பெப்.27

அம்பாறை மாவட்டம் கஞ்சிகுடிச்சாறுப் பகுதியில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் நேற்று அதிகாலை முதல் விசேட அதிரடிப்படையினர் மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டனர் என்று பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கை தலைமையகம் தெரிவித்தது.

இந்த இராணுவ நடவடிக்கையின் போது புலிகளின் இரு முகாம்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# தமக்கு பாதுகாப்பு வழங்கக்கோரி சல்லி கிராம மக்கள் மறியல் போர்!

## திருமலை - புல்மோட்டை வீதியில் போக்குவரத்து ஸ்தம்பிதம்

திருகோணமலை,பெப்.27

திருகோணமலை மாவட்டத்திலுள்ள சல்லி, சாம்பல்தீவுக் கிராமங்களில் கடந்த வியாழன் இரவு பொதுமக்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் மற்றும் வீடுகள், கடைகள் தீயிட்டு எரிக்கப்பட்டமை போன்ற சம்பவங்களை கண்டித்தும் தமக்கு பாதுகாப்பு வழங்குமாறு கோரியும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொது மக்கள் நேற்று திருமலை - புல்மோட்டை வீதியில் மறியல் போராட்டம் ஒன்றை நடத்தினார்கள்.

இப்பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் கடற்படையினருக்கும் இடையில் இடம்பெற்ற மோதல்களையடுத்து படையினர் பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்தியது தெரிந்ததே.

இந்தச் சம்பவத்தை கண்டித்து நேற்றுக்காலை 7 மணி தொடக்கம் இந்த வீதியில் பொதுமக்கள் மறியல் போராட்டம் நடத்தினார்கள்.

பொதுமக்களின் மறியல்போராட்டத்தினால் திருகோணமலை - புல்மோட்டை வீதி ஊடான போக்குவ

(12 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## காணி தேவை

### ஓம் ஸ்ரீராம் ஜெய்ராம் ஜெய் ஜெய்ராம்

### கருணாலயம் - குழந்தைகள் இல்லம்

**சிறுவர் சிறுமியர் காப்பகங்கள் அமைப்பதற்காக யாழ். இராச வீதி/ பலாலி வீதி அண்மித்த பகுதியில், நகரிலிருந்து சுமார் 5 கி.மீற்றர் தூரத்திற்குள் ஒவ்வொன்றும் 50 பரப்பு அளவிலான இரண்டு துண்டுக்காணிகள் தேவைப்படுகின்றன. உரிமையாளர்கள் அல்லது அவர்களின் தத்துவம் பெற்றோர் மாத்திரம் அணுகவும்.**

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:-

Trustee
Satguru Paramahamsa Sri Swami Ramdasji
Charitable Trust,
42, Shrubbery Gardens,
Colombo - 04.
Phone/ Fax :- 592529
E.Mail:arunan@sltnet.lk.

OR

V.P.Paramalingam,
P.O. 5249,
Dubai - U.A.E.
Phone :- (9714) 3590838.
Fax :- (9714) 3590714.
E.mail:jairam@emirates net.ae. (C/11187)



## சிவா தொலைத்தொடர்பு நிலையம்

**உள்நாட்டு வெளிநாட்டு தொலைத்தொடர்புகளை உடனுக்குடன் பெற்றுக்கொள்ளவும் அத்துடன் பக்ஸ்/போட்டோஸ்ரற் வசதியும் உள்ளது. உங்கள் கடிதங்கள், விண்ணப்பங்கள் அனைத்தும் சிறந்த முறையில் போட்டோஸ்ரற் செய்து வழங்கப்படும்.**

உள்நாட்டு இலக்கம் :- 021 - 2913.
வெளிநாட்டு இலக்கம் :- 0094 21 2913.
பக்ஸ் நம்பர் :- 2913

*சிவா தொலைத்தொடர்பு நிலையம்,*
*660, K.K.S. றோட்,*
*யாழ்.இந்துக் கல்லூரி அருகில்.*
(74026)


## 16ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

27.02.2000

| சகல நிலை | சுத்த நிலை |
|---|---|
| 30 | 12 |
| 03 | 02 |
| 1953 | 2000 |



### திருமதி கெங்காரத்தினம் வைத்திலிங்கம்

நோயுற்று வைத்தியசாலையில் இருந்த வேளையிலும், பூதவுடல் அகத்தில் பேணப்பட்டிருந்த வேளையிலும், இறுதிக்கிரியைகளிலும், உதவி புரிந்தவர்கட்கும் பங்கேற்றவர்க்கும் எமது மனமார்ந்த நன்றிகள் என்றென்றும் உரித்தாகுக!

கணவர், பிள்ளைகள்,
தாயார், சகோதரர்கள், மைத்துனர்கள்.

செட்டியகுறிச்சி,
மெய்கண்டான் ஒழுங்கை,
சரசாலை. (C/11177)

### மருத்துவ முகாம்

பண்டத்தரிப்பு பிரதேச மக்களின் நன்மைகருதி நாளை திங்கட்கிழமை காலை 10மணிக்கு பிள்ளையார் கோயிலுக்கு அருகிலுள்ள பொது நூலகத்தில் இலவசமருத்துவமுகாம் ஒன்று நடைபெறவுள்ளது. அப்பகுதி இராணுவத்தால் நடத்தப்படவுள்ள இந்த மருத்துவ முகாமில் சகல வியாதி மற்றும் பல் நோய்களுக்கான சிகிச்சைகள் மேற்கொள்ளப்படவுள்ளதால் குறிப்பிட்ட பகுதி மக்களை மருத்துவமுகாமுக்குச் சென்று சிகிச்சை பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (இ-10)

### எரிகாயங்களால் மரணம்

படுக்கையில் குப்பிவிளக்கு தட்டுண்டு தீப்பற்றியதாக உடல் பூராகவும் எரிந்த நிலையில் கடந்த 14ஆம் திகதி யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட ஒருவர் 12 நாள்களின் பின் நேற்றுமுன்தினம் அங்கு மரணமானார். இணுவில் மேற்கைச் சேர்ந்த தில்லையம்பலம் புஸ்பராசா வயது 32 என்பவரே உயிரிழந்தவராவார். மரணவிசாரணை அதிகாரி இ.ஜெயரட்ணம் மரணவிசாரணையை மேற்கொண்டார். மரண விசாரணையை அடுத்து சடலம் தந்தையிடம் ஒப்படைக்கப்பட்டது.


**BEACON**
யாழ்.
**கணக்கீடு**
திரு. பாலவாசன்
A/L 2000
DAY CLASS
* ஒற்றைப் பதிவு
* ஒப்படை
MON, TUE, THU, FRI
10.30 - 12.30 (74022)



**லிபேட்டி**
அச்சுவேலி
அனேக ரசிகர்களின் வேண்டுகோளுக்கிணங்க
M.R.ராதா, S.S.ராஜேந்திரன்
நடித்த
**இரத்தக் கண்ணீர்**
காட்சிகள் 10.30, 2.30
T.P:- 070 - 212223
070 - 212678
(73866)



**ராஜா**
யாழ்ப்பாணம்
சரத்குமார், தேவயானி
நடித்த
**சூர்யவம்சம்**
காட்சிகள்
10.30, 2.00,5.00
(C/11154)



**நாகம்ஸ்**
சுன்னாகம்
அர்ஜுன், ரேவதி,
பிரகாஷ்ராஜ்,வடிவேலு
நடித்த
**சுபாஸ்**
(ரீலஸ்)
காட்சிகள் 11.00, 2.30
(புதிய நேரம்)
(C/11176)


## மரண அறிவித்தல்கள்

### திருநாவுக்கரசு சுதர்சன்

(கொஸ்மஸ் லங்கா என்ரபிறைஸ் உரிமையாளர், உடப்பு)

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் உடப்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருநாவுக்கரசு சுதர்சன் 23.02.2000 அன்று அகால மரணமானார்.

அன்னார் செ.திருநாவுக்கரசு - கோமளா திருநாவுக்கரசு (யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், கணக்காய்வு) ஆகியோரின் சிரேஷ்ட புதல்வனும் தர்சினி (கனடா), நிரஞ்சன் (மாணவன், கொழும்பு), றஞ்சித் (மாணவன், கொழும்பு) ஆகியோரின் அருமைச் சகோதரனும் சத்தியானந்தனின் (கனடா) அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.02.2000) ஞாயிற்றுக்கிழமை இல.04, ரஞ்சன் லேன், வெள்ளவத்தையில் உள்ள இல்லத்தில் காலை 9.00 மணிக்கு நடைபெற்று, காலை 10.00 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக கனத்தை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.04, ரஞ்சன் லேன்,
ஸ்ரேசன் றோட்,
வெள்ளவத்தை.
T.P: 585953. (74014)

தகவல்:
செ.திருநாவுக்கரசு
(தந்தை)
பணிக்கர்வளவு,
திருநெல்வேலி.

### அம்பலவாணர் இராசதுரை B.A. (Lond.)

(முன்னாள் D.R.O., திருகோணமலை,
இளைப்பாறிய ஆசிரியர், பரமேஸ்வராக் கல்லூரி)

வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலவாணர் இராசதுரை நேற்று (26.02.2000) சனிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் - செல்லம்மா தம்பதிகளின் மூத்த புதல்வனும் தங்கமலரின் அன்புக் கணவரும் தங்கத்துரையின் அன்புத் தந்தையும் ரேணுகாவின் அன்பு மாமனாரும் ராரேணியின் அன்புப் பேரனும் கண்ணுத்துரை (முன்னாள் முகாமையாளர், கொங்ஹொங் வங்கி, கொழும்பு), Dr. பவளத்துரை (லண்டன்), காலஞ்சென்ற கைலாசத்துரை (தூதரக அதிகாரி), சின்னத்துரை (B.sc. ஆசிரியர், அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் கமலேஸ்வரி, பட்டத்தி, தேவிகாராணி, பா.இராசமலர், காலஞ்சென்ற பாலகிருஷ்ணன் (பாலு), இராசரத்தினம் (சின்னத்தம்பி), சண்முகராஜா, சிவனேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்பு மருமகனும் இரத்தினதுரை - கலா, மோகனதுரை - வதனா, திரு. திருமதி Dr. விஜயதுரை, மகேந்திரதுரை - பிரியா, தேவதுரை, கஜேந்திரதுரை ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (27.02.2000) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நல்லடக்கத்திற்காக கோம்பையன்மணல் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

880, கே.கே.எஸ். வீதி,
நாச்சிமார்கோயிலடி,
யாழ்ப்பாணம். (74024)

தகவல்:
தங்கமலர்
(மனைவி)

### உருத்திரன் துளசிதாசன்

மல்லாகம் காளிகோவிலடியை பிறப்பிடமாகவும் நைஜீரியாவை வசிப்பிடமாகவும் கொண்ட உருத்திரன் துளசிதாசன் (19.02.2000) சனிக்கிழமை அமெரிக்காவில் அகால மரணம் அடைந்துவிட்டார்.

அன்னார் உருத்திரன் - நல்லம்மா தம்பதியினரின் அன்பு மகனும் சிவசுதாசன், ரவீந்திரதாசன், முரளிதாசன், செந்தில்தாசன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.02.2000) ஞாயிற்றுக்கிழமை நைஜீரியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காளிகோவிலடி,
மல்லாகம். (74025)

தகவல்:
க.மனோகரன்
(மைத்துனர்)

### தில்லையம்பலம் புஸ்பராசா

இணுவில் கிழக்கைச் சேர்ந்த தில்லையம்பலம் புஸ்பராசா நேற்றுமுன்தினம் (25.02.2000) வெள்ளிக்கிழமை இரவு அகால மரணமானார்.

அன்னார் தில்லையம்பலம் - இரத்தினேஸ்வரியின் அன்பு மகனும் யோகராசா (லண்டன்), யோகேந்திரன் (ஜேர்மனி), ஜெயராசா (ஜேர்மனி), புஸ்பராணி (ஜேர்மனி), யோகராணி (இணுவில்), ஜெயராணி (ஜேர்மனி) ஆகியோரின் சகோதரனும் இன்பநாதன் (ஜேர்மனி), சிவபாலன் (இணுவில்), சிவாசினி (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும் நிருஷான், பிரஷான், கிருஷான், மகிழினி, நிஷாலினி ஆகியோரின் மாமனாரும் நிரோசனின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.02.2000) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11.00 மணிக்கு காரைக்கால் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிள்ளையார் கோயிலடி,
இணுவில் கிழக்கு,
இணுவில். (74028)

தகவல்:
துரையப்பா தில்லையம்பலம்.

### வீரவாகு முத்துக்குமாரு

நல்லூர், வைமன் வீதியைப் பிறப்பிடமாகவும், மட்டக்களப்பை வதிவிடமாகவும் கொண்ட வீரவாகு முத்துக்குமாரு நேற்று (26.02.2000) சனிக்கிழமை மட்டக்களப்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரவாகு - பூரணம் தம்பதியினரின் அன்பு மகனும் சரஸ்வதியின் அன்புக் கணவரும் மயூரனின் பாசமிகு தந்தையும் இராசலட்சுமி (கனடா), சரஸ்வதி, சுந்தரலிங்கம் (யாழ். அஞ்சலகம்) காலஞ்சென்ற மகாலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மட்டக்களப்பில் இன்று (27.02.2000) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

40/21, வைமன் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம். (74027)

தகவல்:
வீ.சுந்தரலிங்கம்
(சகோதரன்)
மு.யோகரெட்ணம்
(மைத்துனர்)


## MINE ACTION ASSISTANCE GROUP
(MAAG - JAFFNA)

(A Co-operation between Government Agent, Jaffna and the UNOPS- JRRP)

# VACANCIES
## MEDICS

**Eligibility Requirements:**

Paramedical Practitioners or traind in advanced First Aid with introduction course on Trauma

Please send your application with CV and your contact telephone number (if any) to reach the office before 16h30 on March 3rd, Friday

**MINE ACTION OFFICER,**
**Secretariat,**
**Jaffna.**

உதயன்

## புலம் பெயர்ந்தோர் தரும் பெருமை!

எழுபது என்பதுகளுக்கு முன்னர் வெளிநாடு சென்ற ஈழத்தமிழர்களில் மிகப் பலரும் தமது தாய் மொழியையும் கலைகளையும் புறக்கணித்து, தாம் வாழும் நாட்டின் மொழியையும் கலாசாரங்களையும் கைப்பிடித்தவர்களாகவே விளங்கினர்.

ஆனால் கடந்த இரண்டு தசாப்தங்களாக இங்கிருந்து புலம்பெயர்ந்தவர்கள், முந்தியவர்களுக்கு நேர்மாறாக இருப்பது அவதானிக்கத் தக்கது. மொழியையும் கலைகளையும் நமது பண்பாடுகளையும் பேணுவதில் பேரார்வம் காட்டி வருகிறார்கள். சமய வாழ்க்கை வாழ்வதிலும் அக்கறை உள்ளவர்களாக விளங்குகின்றனர். அது மட்டுமன்றி தங்கள் பிள்ளைகளுக்கு தாய்மொழியையும் கலைகளையும் பயிற்றுவித்து அவர்கள் தமிழர்கள் என்ற அடையாளத்தைக் கைவிடாதிருக்க வேண்டும் என்பதிலும் மிகுந்த அக்கறை கொண்டுள்ளனர்.

ஈழத் தமிழர்கள் புலம் பெயர்ந்துள்ள மேற்கு நாடுகளில் எமது நுண்கலைகள் வாராந்த நிகழ்வுகளாகி விட்டன. நாட்டியங்கள், நாடகங்கள், இலக்கிய மற்றும் சமயப்பேச்சுக்கள் என்று அங்கெல்லாம் விழாக்கள் நடைபெற்ற வண்ணமே உள்ளன.

அவை மட்டுமன்றி, பாடசாலைக் கல்விக்கும் புறம்பமாகத் தமிழ் மொழிக் கல்வியும், தமிழ்க் கலைகளும் இதற்கெனப் பாடசாலைகள் நிறுவப்பட்டுப் போதிக்கப்படுகின்றன. அங்கு மாணவர்கள் மத்தியில் போட்டிகள் நடத்தப்பட்டு, பரிசில்கள் வழங்கப்பட்டு இளஞ் சந்ததியினருக்கு ஊக்கம் கொடுக்கப்படுகிறது.

எங்கள் மொழியையும் கலைகளையும் வளர்ப்பதற்கான வசதிகளும் வாய்ப்புகளும் சுதந்திரமும் இந்த நாட்டிலே மிக மிகக் குறைவு. ஆனால் அவை மூன்றும் நாம் புலம் பெயர்ந்து வாழும் நாடுகளில் தாராளமாக இருப்பதனைத் தக்கவாறு அங்குள்ளோர் பயன்படுத்துகின்றனர். இன, மொழி, கலாசார உணர்வு உள்ளவர்களுக்கு மகிழ்ச்சியும் மன நிறைவும் தரும் விடயம் இது.

வெளிநாடுகளில் புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களின் நலன் கருதி, நுண்கலைப்பீடம் ஒன்றை நிறுவுவதற்கு கடந்த வாரம் சுவிட்சர்லாந்தில் நடைபெற்ற கருத்தரங்கில் முடிவு செய்யப்பட்டிருப்பது இப்போதைய செயற்பாடுகளுக்குச் சிகரம் வைத்தாற் போன்றதாகும்.

தமிழர்கள் வாழும் மேலை நாடுகள் எல்லாவற்றுக்கும் — அங்கு வாழும் தமிழ் மாணவர்கள் எல்லோருக்கும் — பொதுவான நுண்கலைப் பாடத்திட்டம் ஒன்றை வகுக்கவும் அதன் அடிப்படையில் வகுப்புகளை நடத்தி பரீட்சைகளை வைக்கவும் முடிவாகியுள்ளது. பேராசிரியர் கா. சிவத்தம்பியின் துறைசார் நிபுணத்துவ ஆலோசனை ஏற்கப்பட்டு இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

இங்குள்ள பாடசாலைகளிலும் சரி, பல்கலைக்கழகங்களிலும் சரி தமிழர் நுண்கலைகளின் முழுமையான அத்திவாரத்தில் அமைந்த பாடத்திட்டங்கள் உண்டா என்பது சந்தேகமே. எங்கோ ஓர் இடத்திலிருந்து சிங்கள மூலத்தை அடியொற்றியே அவை இணைவிட்டிருக்கும். புலம்பெயர்ந்த நாடுகளில் தமிழ் மூலவேருடனான நுண்கலைப் பாடத்திட்டம் அமைய இருப்பது பாராட்டத் தக்கதாகும். எங்கள் இனத்தின் பெருமையை உயர்த்த இது ஓர் ஊக்கியாக அமையட்டும்.

# சந்திரிகாவுக்கு எதிராக ரூ.100 கோடி நஷ்டஈடு கோருகிறார் விக்டர் ஐவன்

## சர்வதேச மன்றில் மனுத்தாக்கல் செய்வாராம்

கொழும்பு, பெப். 27

ஜனாதிபதிசந்திரிகா குமாரதுங்காவிற்கு எதிராக நூறு கோடி ரூபா நஷ்டஈடு கோரி ஜெனிவா நகரில் செயற்படும் சர்வதேச மனித உரிமைக் குழுவின்முன்னிலையில் மனுத்தாக்கல் செய்வது என்று 'ராவய' பத்திரிகை ஆசிரியர் விக்டர் ஐவன் தீர்மானித்திருப்பதாக அறியவருகின்றது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே. கட்சிக்கு ஆதரவு வழங்குவதற்கு இணங்கி, அதற்குக் கைம்மாறாகஐ.தே. கட்சிக்கு ஆதரவான ஒரு நிறுவன முகாமையாளரிடமிருந்து 'ராவய' பத்திரிகையின் அச்சு இயந்திரக் கொள்வனவுக்கு அப்பத்திரிகை இரண்டு கோடி ரூபாவைப் பெற்றுக்கொண்டதுஎனக்குற்றஞ்சாட்டி ஜனாதிபதியின் பெயரில் ஜனாதிபதி பணிமனையினால் 'சண்டேரைம்ஸ்' பத்திரிகையில் வெளியிடப்பட்ட செய்தியை ஆட்சேபித்தே மனுத்தாக்கல் செய்வதுஎனவிக்டர் ஐவன் தீர்மானித்துள்ளார்.

அரசமைப்புச் சட்டத்தின்படி ஜனாதிபதி பதவியை வகிக்கும் ஒருவருக்கு எதிராகவோ அல்லது அவர் செய்ததாகக் கூறப்படும் தவறுக்கு எதிராகவோ சிறிலங்காவிலுள்ள எந்தவொரு நீதிமன்றிலும் வழக்குத் தொடுக்க முடியாது.

''சண்டேரைம்ஸ்'' பத்திரிகையில் வெளியான ஜனாதிபதியின் செய்தியானது தனக்கு உளத்தாக்கத்தையும் அகௌரவத்தையும் ஏற்படுத்தியுள்ளது எனவும் —

எனவே அதற்கு எதிராகத் தான் நீதிமன்றம் செல்லும் உரிமை மறுக்கப்பட்டுள்ளதால் தனது அடிப்படை மனித உரிமைமறுக்கப்பட்டுள்ளது என்ற அடிப்படையில் ஜெனிவா நகரில் செயற்படும் சர்வதேச மனித உரிமைக் குழுவில் ஜனாதிபதிக்கு எதிராக நஷ்டஈட்டு மனுத்தாக்கல் செய்யவுள்ளதாகவும் —

விக்டர் ஐவன் தெரிவித்துள்ளார். (உ)

# மல்லாகம் ம.வியில் கல்விக் கண்காட்சி

வலி. வடக்கு, பெப். 27

புத்தாயிரமாம் ஆண்டில் மல்லாகம் மகாவித்தியாலயத்தின் நூற்று நாற்பதாவது வருடம் நிறைவுறுவதை ஒட்டி புதிய கல்வித் திட்டத்திற்கமைவான மாபெரும் கல்விக் கண்காட்சி எதிர்வரும் புதன்கிழமையில் இருந்து மூன்று நாள்கள் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

கண்காட்சியை யாழ். மருத்துவபீட உடற்கூற்றியல் துறைத் தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான செல்வி சகுந்தலாதேவி அம்பிகைபாகன் திறந்து வைப்பார்.

இரண்டாம் நாள் கண்காட்சியை மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் ஆதீனகர்த்தா மகாராஜஸ்ரீ கு. து சண்முகநாதக் குருக்களும் — மூன்றாம் நாள் கண்காட்சியை வலிகாமம் கல்விவலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதனும் ஆரம்பித்து வைக்கவுள்ளனர். (உ-86)

# மீளக்குடியமர அனுமதிக்காத பகுதிகளில் திருட்டைத் தடுக்குக

## பிரதேச சபைக் கூட்டத்தில் தீர்மானம்

சண்டிலிப்பாய், பெப். 27

மக்கள் இதுவரை சென்று மீளக்குடியமர்வதற்கு அனுமதி வழங்கப்படாதிருக்கும் அம்பனை போன்ற இடங்களைச் சேர்ந்தவர்கள் தங்கள் வீடு வாசல்களை நேரில் சென்று பார்வையிட அனுமதி வழங்கப்படுவதைப் பயன்படுத்திஅப்பகுதியைச் சேராத சிலர் அங்கு சென்று வீட்டுப் பொருள்களைத் திருடிக் கொண்டு வருகின்றனர். இதனைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

மேற்கண்டவாறு வலிகாமம் வடக்கு பிரதேச செயலரைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானம் ஒன்று அண்மையில்நடைபெற்ற வலி.வடக்கு பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

பிரதேச சபையின் உபதலைவர் வி. சண்முகநாதன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் இது தொடர்பாக வலி. வடக்கு பிரதேச செயலருக்கு கடிதம் ஒன்றின் மூலம் உடனடியாக வேண்டுகோள் விடுப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட இதரமுக்கிய தீர்மானங்கள் வருமாறு:-

வலிகாமம் வடக்கு பிரதேசத்தில் கிராமப்புறப் பாடசாலைகளை மூடிவிட்டு அருகில் உள்ள தரம் உயர்த்தப்படும் வேறு பாடசாலைகளுடன் அவற்றை இணைத்துக் கொள்வதற்கு கல்வித்திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக அறிய முடிகின்றது. கிராமப்புறப் பாடசாலைகள் பல அப்பகுதியில் வாழ்ந்த பெரியார்கள் மற்றும் சமூக சேவையாளர்களின் ஞாபகார்த்தமாக நிறுவப்பட்டன. இன்றும் இப்பாடசாலைகளை அவர்களின் வழித்தோன்றல்கள் உதவிகள் பல புரிந்து பராமரித்து வருகின்றதைக் காணக் கூடியதாக உள்ளது.

இன்றைய போர்க்கால சூழ்நிலையைப் பயன்படுத்திக் கிராமப்புற சிறிய பாடசாலைகளை வேறு பாடசாலைகளுடன் இணைத்துக் கொள்வது இப்பகுதி மக்களின் அடிப்படைக் கல்வி வசதிகளை இல்லாது செய்து விடும். ஆகவே பொதுநல ஸ்தாபனங்கள், அபிவிருத்திச் சங்கங்கள்ஆகியவற்றுடன் கலந்து ஆலோசித்த பின்பே இதனை நடைமுறைப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம் — என்றுள்ளது.

இது தொடர்பாக வலிகாமம் கல்வி வலயப் பணிப்பாளருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது. இத்தீர்மானத்தின் பிரதியை திருகோணமலையிலுள்ள வடக்கு — கிழக்கு மாகாணகல்வி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

வலி. வடக்கில் மக்கள் மீளக்குடியமர்ந்த இடங்களுக்கு மின்சார விநியோகம் செய்து தருமாறு யாழ். பிரதேச மின்சாரசபைபொறியியலாளரைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானமும் நிறைவேறப்பட்டது. (இ-135)

## நாளை

மாசி 16

திங்கட்கிழமை

திதி: நவமி

பின்னிரவு 2.53 வரை.

நட்சத்திரம்: கேட்டை

முன்னிரவு 7.22 வரை

சுபநேரம்: 12.29—1.59

ராகுகாலம்: 7.59—9.29

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### உதய வாக்கு

எல்லோரும் தம்மை விட்டு வேறு எதையோ சீர்திருத்த முயலுகிறார்கள்.

-ரவீந்திரநாத் தாகூர்

## கண்காட்சி

தென்மராட்சி, பெப். 27

வடக்கு—கிழக்கு மாகாண கிராமிய அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் பளைப் பிரதேச செயலக கிராமிய அபிவிருத்திப் பிரிவினால் நடத்தப்படும் தையல், மனையியல் டிப்ளோமா பயிற்சி வகுப்பில் கலந்து கொண்ட பயிலுநர்களால் தயாரிக்கப்பட்ட தையல், மனையியல் பொருட்களின் கண்காட்சியும் விற்பனையும் நாளையும் நாளை மறுதினமும் காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை பச்சிலைப்பள்ளி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கூட்டுறவு மண்டபத்தில் இடம்பெறும்.

பெரியபளை கிராமிய அபிவிருத்திச் சங்கத் தலைவர் சு. தவரத்தினசிங்கம் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் வி. ப.வேலாயுத பிள்ளை, பளை பிரதேச செயலர் சு.புத்திசிகாமணி ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக யாழ்.செயலக மாவட்ட கிராமிய அபிவிருத்தி அலுவலர் செ.செல்வரத்தினம், பளை வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் ச. அம்பிகைபாலன், பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் சி. சுந்தரலிங்கம் ஆகியோரும் கலந்து கொள்வர். (உ—117)

# இல்ல மெய்வல்லுநர் போட்டிகள்

அச்சுவேலி, பெப். 27

அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை திங்கட்கிழமை பிற்பகல் 1 மணிக்கு கல்லூரி அதிபர் அருட்சகோதரி மேரி எத்தல் லீவா தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் கோப்பாய் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் இ. திருஞானசுந்தரம் பிரதம விருந்தினராகவும் அச்சுவேலி பங்குத் தந்தை அருட்திரு. எம். வி. ஈ. இரவீந்திரன் கௌரவ விருந்தினராகவும் லங்காமாதா மடத் தலைவி அருட்சகோதரி எம். டெலாறோஸ் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர். (உ-8)

★ ★ ★

யாழ்ப்பாணம், பெப். 27

மிருசுவில் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை பிற்பகல் 1 மணிக்கு அதிபர் வ. கந்தசாமி தலைமையில் பாடசாலை மைதானத்தில் இடம் பெறும்.

இந்த நிகழ்வில் தென்மராட்சிக் கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் க. குமாரசாமி முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார் (உ-8)

★ ★ ★

யாழ்ப்பாணம், பெப். 27

குப்பிளான் விக்னேஸ்வரா மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியும் புதிய கட்டடத் திறப்பு விழாவும் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு வித்தியாலய அதிபர்த. சிவகடாட்சம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு — கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் க. கந்தசாமியும் சிறப்புவிருந்தினர்களாக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ. இராசையா, வலி.தெற்கு பிரதேச செயலர் ஆ. மகாலிங்கம், யாழ். கல்வித் திணைக்களப் பொறியியலாளர் பொ. சிவபாலன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-10)

★ ★ ★

கைதடி நவபுரம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை திங்கட்கிழமை பிற்பகல் 1 மணிக்கு அதிபர் வே. பாலசுப்பிரமணியம் தலைமையில் பாடசாலை மைதானத்தில் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராகச் சாவகச்சேரி கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் நா. சத்தியநாதனும், சிறப்பு விருந்தினராக வலி. மேற்குக் கல்வி வலய நிர்வாக உத்தியோகத்தர் ச. வீரசிங்கமும் கலந்து கொள்வர். (உ-8-74)

★ ★ ★

கைதடி சேதுகாவலர் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர்போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்குப் பாடசாலை மைதானத்தில், அதிபர் திருமதி செ. வடிவேல் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் சாவகச்சேரி கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் நா. சத்தியநாதன் பிரதம விருந்தினராகவும், சமாதான நீதிவான் இ. குழந்தை வடிவேலு சிறப்பு விருந்தினராகவும், கல்வி வலயத் தொழில்நுட்பப் பொறியியலாளர் வே. பாராளன், கைதடிமத்தி கிராம சேவையாளர் பெ. செல்லையா ஆகியோர் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்வர். (உ-8-74)

## வலைப்பந்தாட்டம்

வலி. வடக்கு, பெப். 27

யாழ்ப்பாணம் கல்வி வலயத்தில் யாழ். கோட்ட மட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையில் நடைபெறும் வலைப்பந்தாட்டப் போட்டிகளில் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய ஆடுகளத்தில் இடம்பெற உள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு—

### 15 வயதுப் பிரிவு

★ திருக்குடும்பக் கன்னியர் மடம் எதிர் வேம்படி மகளிர் கல்லூரி.

★ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி எதிர் புனித ஜேம்ஸ் ம.வி.

### 17 வயதுப் பிரிவு

★ திருக்குடும்பக் கன்னியர் மடம் எதிர் கொழும்புத்துறை இந்து ம.வி.

★ புனித ஜேம்ஸ் ம. வி. எதிர் நல்லூர் தெற்கு விக்னேஸ்வரா வித்தியாலயம். (உ-8-86)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## சங்கீதம்

கிருஷ்ணவேணி மயில்வாகனம் எழுதிய தரம் 10 கர்நாடக சங்கீதப் புத்தகம் விற்பனைக்கு உண்டு. இது சங்கித சபையின் தரம் 2, 3 -க்கும் பொருத்தமானது. கிடைக்கும் இடம்: யாழ். பிரபல புத்தக சாலைகள்.

(74007)

## விற்பனைக்கு

SHRIRAM HONDA E 650K ஜெனரேற்றர், SONY CD PLAYER GRX — 8 (2000W). மரத்தளபாடம் செய்வதற்குரிய BANDSAW, JAPAN NATIONAL DECK (N.V. 450 E.N.) என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 67, செட்டித் தெரு, நல்லூர். (73919)

ஈழத்தின் தலைசிறந்த எழுத்தாளர்களின் கட்டுரைகள் அடங்கியுள்ள உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் வெள்ளி விழா மலர் விற்பனையாகின்றது. உலகத் தமிழ், செ. பரமநாதன் ''ஸ்ரீ சாயி'' மானிப்பாய் வீதி, தாவடி, கொக்குவில் என்ற முகவரியில் தொடர்பு கொள்ளவும். விலை 50 ரூபா. தபால் செலவு இனாம். தொலைபேசி: 3294.

(73985)

தூயஇன அல்சேஷன் நாய்க் குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: இ. ரவீந்திரன் (Black & White) மைதானம் அருகில் ஞான வைரவர் வீதி, கட்டுடை, மானிப்பாய். (74006)

## வீடு விற்பனைக்கு

யாழ். மாநகரசபை எல்லைக்குள் வீட்டுடன் காணி 2¾ பரப்பு விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: P. செல்லத்துரை, ஆறுமுகம் ஒழுங்கை, 3 ஆம் கட்டை, கல்வியங்காடு, யாழ்ப்பாணம். (74003)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1967 இல் பிறந்த 7 இல் செவ்வாய் (32 பூரவம்), அவிட்ட நட்சத்திரம், A/L Bio Science செய்து வவுனியா பல்கலைக் கழகத்தில்DiplomainEnglish முடித்துவிட்டு தற்போது ஜேர்மனியில் கார்க் கொம்பனியில் கடமைபுரியும் ஸ்பொன்சர் செய்யத் தகுதியுள்ள அழகிய மணமகனுக்கு படித்த அழகிய மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். விண்ணப்பிக்கவும்: விளம்பர இல. 1003, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (73926)

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 46 வயதுடைய விவாகரத்துப்பெற்ற ஐரோப்பாவில் நிரந்தர வதிவிடம் கொண்ட மணமகனுக்கு கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த நற் பண்பு உடைய அழகிய படித்த மணப்பெண்ணைத் தாயார் தேடுகிறார். படம், குடும்ப விபரத்துடன் தொடர்பு-கொள்ளவும். N.P. நாதன் 10/7E, Greenland lane, Colombo 5 பொருத்தமற்றவை திருப்பி அனுப்பி வைக்கப்படும்.

(74014)

## பெரய்யா மொழி ஜோதிடம்

தொழில் பிரச்சினை, கல்வித்தடை, விவாகத்தடை தீர ஆலோசனை வழங்கப்படும். பலன் தவறினால் பணம் திரும்பப் பெறலாம். சாதகத்துடன் வரவும். ஞாயிற்றுக் கிழமைகளில் மல்லாகம் பழம் பிள்ளையார் கோயில் மடத்திலும் சனி, செவ்வாய்க் கிழமைகளில் ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோயிலடி, 140, பருத்தித்துறை வீதி, நல்லூரிலும் சந்திக்கலாம்.

(73943)

## கல்வி

சுட்டி, மடக்கை, கூட்டல் விருத்தி, பெருக்கல் விருத்தி ஆகிய பாட அலகுகளை உள்ளடக்கிய பயிற்சி வினாவிடை புத்தகம் விற்பனையாகின்றது. யாழ். நகரில் உள்ள புத்தகசாலைகளில் பெற்றுக் கொள்ளலாம். ரூபா — 25 மட்டுமே. (73978)

## திருமணசேவை

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இந்து, கிறிஸ்தவ மணமக்கள் உண்டு. துரிதமான திருப்திகரமான சேவை (அரசாங்க பதிவு இலக்கம்: 34) நேரிலோ தபால் மூலமோ தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: கு. திருவிளங்கம், 90, சட்டநாதர் கோயில் வீதி, நல்லூர் வடக்கு. (73571)

## சோதிடம்

கணனி மூலம் தமிழில் ஜாதகங்களைத் துல்லியமாக கணிப்பதற்கும் பலனை அறிவதற்கும் எண் சோதிடம் பார்ப்பதற்கும் பிறந்த நேரம் திகதி, ஊர், பெயர் இவற்றுடன் தொடர்புகொள்ளும் முகவரி: க. கிருபானந்தக்குருக்கள், பருத்தித்துறை வீதி, கிராம்புவில், சாவகச்சேரி. T.P., FAX 070-212300 (73928)

## இறைச்சிக்கோழி

இறைச்சிக்கோழிகள் விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்புகளுக்கு:- இல- 40. கோயில் வீதி, யாழ்ப்பாணம். (73929)

## மணமக்கள் தேவை

கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த அரச உயர் பதவிகளில் பல மணமகன்கள் உண்டு. இங்கிலாந்து, ஜேர்மனி, கனடா, மணமகன்கள் இங்குவந்து திருமணம் செய்வர். தொடர்பு: இல. 39, கே. கே. எஸ். வீதி, கொக்குவில். (73958)

யாழ். இந்து உயர் குடும்பத்தைச் சேர்ந்த 40 வயது செவ்வாய் தோஷமற்ற தொழில் நுட்பக்கல்லூரி போதனாசிரியருக்கும் 28 வயது செவ்வாய் தோஷமற்ற பட்டதாரிச் சகோதரிக்கும் பெற்றோர் தகுந்த மணமக்களைத் தேடுகின்றனர். முகவரி: கே. கமலா, C/o திருமதி சு. விஜயகுமார், அரசடி ஒழுங்கை, புலோலி கிழக்கு, பருத்தித்துறை.

(73999)

## A/L பௌதிகவியல்

பௌதிகவியல், இணைந்த கணிதம், தூயபிரயோக கணிதம். அனுபவமும் பயிற்சியும் பெற்ற ஆசிரியரினால் (20 வருட வினாத்தாள் உட்பட) மிகச் சிறப்பாக குறுகிய காலத்தில் கற்பிக்கப்படும். தனிப்பட்ட முறையிலும். R. பாலசுப்பிரமணியம் B. Sc. (Cey), Dip. in Ed, 17/1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

(73976)

## சித்தி விநாயகர் சோதிடம்

தவிர்க்க முடியாத காரணத்தினால் மறு அறிவித்தல் வரை நிலையம் மூடப்பட்டிருக்கும். சிரமங்களுக்கு வருந்துகிறேன்.

(73975)

# வலி. கிழக்கு பிரதேச சபை,

நீர்வேலி.

**கோப்பாய், நீர்வேலி, புத்தூர், அச்சுவேலி, உரும்பிராய் உப அலுவலகங்கள்**

## 1987 ஆம் ஆண்டின் 15 ஆவது இலக்க பிரதேசசபைகள் சட்டம்

# ஆதனவரி பற்றிய அறிவித்தல்

1987 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் கட்டளைச் சட்டம் இல. 15 இன் கீழ் அதற்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் சார்பாக, ஆதனவரி அறவீடு சென்ற வருடம் அறவிடப்பட்ட வரி விகிதத்தின் பிரகாரம் 2000 ஆம் ஆண்டு அறவீடு செய்யப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

2000 ஆம் ஆண்டு வரையுள்ள ஆதனவரியை நிலுவையின்றிச் செலுத்துவதுடன் 2000 ஆம் ஆண்டு ஒவ்வொரு காலாண்டுக்குமுரிய வரியை அந்தக் கந்தாயத்தின் முதல் மாத முடிவிற்குள் செலுத்துவோருக்கு காலாண்டுக்கான வரியின் 5 வீத கழிவு வழங்கப்படும்.

குறிப்பிட்ட திகதிக்குள் ஆதனவரியைச் செலுத்தத்தவறின் வசிப்பிடங்களுக்கும் வெற்றுக் காணிகளுக்கும் 15 வீதமும் ஏனைய ஆதனங்களுக்கு 20 வீதமும் விறாந்துக் கட்டணமாக வரியுடன் சேர்த்துச் செலுத்தப்படல் வேண்டும்.

எனவே தங்கள் ஆதனங்களுக்குரிய வரிகளை அந்தந்த உப அலுவலகங்களில் முழுமையாகச் செலுத்தி, வரிக் கழிவுகளைப் பெற்று, சபையுடன் ஒத்துழைக்குமாறு வரியிறுப்பாளர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

குறிப்பு;-

01. 1999 ஆம் ஆண்டு முடியவுள்ள வரி நிலுவைகள் செலுத்தப்பட்ட பின்பே 2000 ஆம் ஆண்டுக்கான வரி ஏற்றுக் கொள்ளப்படும்.
02. சேதமடைந்தும், காலியாகவுள்ளதுமான ஆதனங்களுக்கான வரிவிலக்கின் பொருட்டான விண்ணப்பங்கள் அந்தந்த உப அலுவலகங்களில் 30 — 04 — 2000 ஆம் திகதிக்கு முன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
03. ஆதனவரி நிலுவை சம்பந்தமாக தனிப்பட்ட அறிவித்தல்கள் வழங்கப்படமாட்டா. ஆதன உரிமையாளர்களும் அவர்கள் இல்லாத விடத்து வாடகைக் குடியிருப்பாளர்களும் சம்பந்தப்பட்ட உப அலுவலகங்களுடன் தொடர்பு கொண்டு, நிலுவைகளைச் செலுத்தி எம்முடன் ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

பூ. குணசிங்கம்
(தவிசாளர்)

வலி. கிழக்கு பிரதேச சபை,
தலைமை அலுவலகம்,
நீர்வேலி.
25 - 02 - 2000 (சி-11203)

# வாழ்த்துகின்றோம்

சங்குவேலியைச் சேர்ந்த

## திரு. செல்லத்துரை ஈஸ்வரன் அவர்கள்

புதிய இன நெல் விளைச்சலில் அமோக அறுவடை பெற்று சாதனை படைத்ததைப் பாராட்டுவதுடன், வேளாண்மையில் மேலும் பல சாதனைகள் படைக்க மனமார வாழ்த்துகின்றோம்.

நண்பர்கள், நண்பிகள்.

(74021)

# நினைவஞ்சலி

எமது கல்லூரியின் முன்னாள் சிரேஷ்ட ஆசிரியை

செல்வி யோகலட்சுமி சோமசுந்தரம்

அவர்களின் அன்புத்தாயார்

## திருமதி இலட்சுமிப்பிள்ளை சோமசுந்தரம்

அமரத்துவமெய்தியதையிட்டு அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஈழத்து சிதம்பரேஸ்வரரை இறைஞ்சுகின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்கள்.

யா/யாழ்ற்ரன் கல்லூரி,
காரைநகர். (74011)

# கண்ணீர் அஞ்சலி

யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (கணக்காய்வு)

திருமதி கோமளா திருநாவுக்கரசு

அவர்களின் சிரேஷ்ட புதல்வன்

## திருநாவுக்கரசு சுதர்சன்

அவர்களின் அகால மரணச் செய்தி கேட்டு அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடைகின்றோம். அவரது இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
அங்கத்தவர்கள்.
கோப்பாய் பனை தென்னை வள
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்.

பருத்தித்துறை வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய். (74001)

# கண்ணீர் அஞ்சலி

யாழ். மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் (கணக்காய்வு)

திருமதி கோமளா திருநாவுக்கரசு

அவர்களின் பாசமிகு மகன்

## திருநாவுக்கரசு சுதர்சன்

அவர்களின் திடீர் மறைவுச் செய்திகேட்டு மிகுந்த வேதனையடைகிறோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகிறோம்.

பணியாளர்களும், பணிப்பாளர்களும்,
அளவெட்டி, மல்லாகம் ப.நோ.கூ. சங்கம்.
அளவெட்டி.

(சி/11191)

# கண்ணீர் அஞ்சலி

யாழ். மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் (கணக்காய்வு)

திருமதி கோமளா திருநாவுக்கரசு அவர்களின்

அன்பு மகன்

## திருநாவுக்கரசு சுதர்சன்

அவர்களின் திடீர் மரணச் செய்தி அறிந்து துயரடைகின்றோம். இவரின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், பணிப்பாளர்கள்,
பணியாளர்கள்.

ப.நோ.கூ.சங்கம்
புலோலி. [சி/11192]

# நோர்வேயின் ஆரம்ப யோசனைகளுக்கு அரசாங்கத்தின் தரப்பில் பச்சைக் கொடி!

## பேரினவாத அமைப்புகளின் எதிர்ப்பு பெரிதாக எடுபடாது எனக் கருத்து

கொழும்பில் இம்மாத மத்தியில் இரு முக்கிய நிகழ்வுகள் இடம்பெற்றன.

நோர்வே வெளிவிவகார அமைச்சர் நட் வொலேபெக்கின் 24 மணி நேர குறுகிய விஜயம் ஒன்று.



சந்திரிகா

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் கூட்டுக்குழுவுக்கும் தமிழ்க்கட்சிகளுக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடல்கள் மற்றையது.

நோர்வே அமைச்சரின் விஜயம் குறித்தும் அதன் விளைவுகள், பின்னணிகள் குறித்தும் இங்கு நோக்கலாம்.

கடந்த ஜனவரி மாதத்தில் இலங்கை வந்த நோர்வேயின் துணை வெளிவிவகார அமைச்சர் லெவி லுட்டி தலைமையிலான குழு தமிழ்க் கட்சிகள், ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி ஆகியவற்றின் பிரதிநிதிகளுடன் பேச்சுக்கள், கலந்துரையாடல்களை நடத்தியது. அவ்வேளையில் எட்டப்பட்ட விடயங்களை வெளிவிவகார அமைச்சர் நட் வொலேபெக்கிடம் நோர்வேக் குழு சமர்ப்பித்திருந்தது.

அந்த விடயங்களின் அடிப்படையில் அமைச்சர் வொலேபெக் லண்டனில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், அந்த அமைப்பின் சர்வதேச தொடர்பாளர் எஸ். மனோகரன் ஆகியோருடன் பேச்சுக்கள் நடத்தினார்.

இலங்கை அரசு முன் வைத்துள்ள அரசமைப்புச் சீர்திருத்தயோசனைகள் குறித்து ஆராய்வதற்கு முன்னர் வடக்கு - கிழக்கில் சுமுக நிலை உருவாக வேண்டும் அதற்கு வசதியாக அந்தப் பிரதேசங்களுக்கு விதிக்கப் பட்டுள்ள பொருளாதார, போக்குவரத்துத் தடைகள் முற்றாக நீக்கப்படவேண்டும்—

மக்கள் சுதந்திரமாக நட-



நட் வொலேபெக்

முகாம்களில் வைக்கப்பட மாட வசதியாக படைகள் வேண்டும்—

கடந்த காலங்களில் இலங்கை அரசுக்கும் எமக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுக்களின் போது இந்தக் கோரிக்கைகளையே நாம் முன் வைத்தோம்—

ராணுவ மேலாண்மைக்கு உட்பட்டுச் செயற்படும் இலங்கை அரசு, எமது கோரிக்கைகளை நிறைவேற்ற முடியாத நிலை உருவான நாலேயே பேச்சுக்கள் தோல்வியில் முடிந்தன —

மீண்டும் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டு அது தோல்வியில் முடிவடையாமல் இருக்க வசதியாக எமது கோரிக்கைகளை ஏற்று, முதலில் வடக்கு-கிழக்கில் சுமுகநிலை உருவாக்கப்படவேண்டும்—

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் நோர்வே வெளிவிவகார அமைச்சரிடம் விளக்கித் தமது நிலைப்பாட்டைத் தெரிவித்திருந்தனர்.

### கொழும்பு வந்தார்

விடுதலைப் புலிகளின் இந்த நிலைப்பாட்டை விளக்கி, மேற்கொண்டு முயற்சிகளை முன்னெடுக்க வசதியாக வெளிவிவகார அமைச்சர் வொலேபெக கடந்த 17ஆம் திகதி கொழும்பு வந்திருந்தார்.

கொழும்பில் உள்ள நோர்வே தூதரக அதிகாரிகளுடன் முதலில் கலந்துரையாடிய வொலேபெக் பின்னர் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருடன் மூன்று மணி நேரம் ஆலோசனைகள் நடத்தினார்

விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு தொடர்பாக இலங்கை அரசின் அணுகுமுறை என்ன என்பதை அறிவதில் அவர் ஆர்வம் காட்டினார்.

1995 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளுடன் அரசுப் பிரதிநிதிகள் பேச்சு நடத்தினர். ஆனால் விடுதலைப் புலிகள் அந்தப் பேச்சுக்களை

**மாவை குகன்**

முறித்து அரச படைகள் மீதான தாக்குதல்களை ஆரம்பித்தனர்.

இந்தப் பேச்சுக்களில் இதய சுத்தியுடன் நாம் செயற்பட்டோம். புலிகள் தான் ஒழுங்காகச் செயற்படவில்லை—

மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிக்கும் பட்சத்தில் அந்தப் பேச்சுக்கள் சுமுகமாக நடைபெறுவதற்கும் புலிகள் ஒத்துழைப்பதை நோர்வே தான் உறுதி செய்யவேண்டும் —என்று கதிர்காமர் நோர்வே அமைச்சரிடம் எடுத்துச் சொன்னார்.

### எதிர்க்கட்சித் தலைவருடன்

அதன் பின்னர் நோர்வே வெளிவிவகார அமைச்சர் எதிர்க்கட்சித் தலைவரும் ஐ. தே. க. தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவை அவரது அலுவலகத்தில் சந்



ரணில்

தித்தார்.

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஆரம்பிக்கப்படும் பேச்சுக்கள் தொடர்பாக ஐ.தே.

(10 ஆம் பக்கம் பார்க்க)

சூரியகாந்தி
உதயன் ஞாயிறு சிறப்பம்சம்

# பசுவை ஒரு தொழிற்சாலையாக்கி அதிக பால் பெறும் மனிதப் பாவிகள்!

அண்மைக்காலத்தில் மனிதாபிமானமற்ற முறையில் விலங்குகளைக் கொல்வது, அவற்றின் புலாலை உண்பது ஆகியவற்றுக்கு எதிராகப் பொது மக்களின் கருத்துக்கள் பொதுசன ஊடகங்களில் வெளியாகி வருகின்றமை ஒரு நல்ல சகுனம் என்று தான் சொல்லவேண்டும். அதே சமயம் பால் உற்பத்தியைப் பெருக்குவதற்காகப் பசுக்கள் தவறான வழியிலே பயன்படுத்தப்படுவதும் சுவையுணவு தயாரிப்பதற்காகக் கன்றுகள் கொலை செய்யப்படுவதும் படுபாதகச் செயலாகும். பசுவின் உடல் உற்பத்தித் திறனைப் பெருக்கும் வகையில் ஒரு தொழிற்சாலையாகப் பயன்படுவது மனிதாபிமானமற்ற மாபெரும் கொடுமை.

அனைத்துலக பால்பொருள் தொழிற்சாலைகள் ஆண்டு தோறும் பல இலட்சக்கணக்கான இளம் கன்றுகள், பசுக்களினது கொலைக்கும் வேதனைக்கும் காரணமாயுள்ளன. அநேகமான இலங்கை பால் பொருள் பாவனையாளர்களுக்கு அங்கே என்ன நடக்கிறது என்பது தெரியாது. அவர்களுக்கு இது சம்பந்தமான மர்மங்களை அறியும் கடப்பாடு உண்டு.

எமது அயல் நாடான இந்தியாவில் பசு கோமாதா, கோகுலம் என்று உயர்ந்த நிலையில் வைத்து மனிதாபிமான முறையில் வளர்க்கப்படுகிறது.

ஆனால் மற்ற நாடுகளில், (இலங்கைஉட்பட)பசுவானது ஒரு சுமை தாங்கியாகவும் நிலத்தைப் பண்படுத்துவதாகவும் பால் வழங்கியாகவும் இறுதியில் இறைச்சி, தோல் வழங்கியாகவும் பயன்படுகிறது.

### நற்பண்புள்ள மிருகம்

பசு ஒரு சாதுவான மிருகம். அது மனிதராகிய எம்முடன் ஒத்துழைத்தல், சாதுவான நட்பு ஆகிய நற்பண்புகளைக் கொண்டது. இருந்தும் அது விவேகமற்றது என்னும் தவறான கொள்கையும் சிலரிடம் உள்ளது. ஆயினும் அறிவியல் ஆய்வின்படி அது நீண்டகால ஞாபக சக்தி அதாவது வடிவங்கள், மனிதர், பிறவிலங்குகள் பற்றிய ஞாபகம் உடையது. அத்துடன் அவை தமது சிறார்களிடம் அன்பும் ஆதரவும் காட்டி வருவன.

மேனாடுகளிலும் சிறப்பாக நமது விநியோகத்தர்களாகிய ஆஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகியவற்றில் நாம் நினைப்பதுபோல் பசுக்கள் பரந்த புல்வெளிகளில் மேய்ந்து இன்பமாகவோ, சுதந்திரமாகவோ வாழ்வதில்லை. இது ஒரு மாயை. உண்மையில் அந்த நாட்டுப் பாற்பண்ணைகளிலுள்ள பசுக்கள் அதிக பால் தரும் வகையிலும் மிகக் குறைந்த செலவிலும் வளர்க்கப்படுகின்றன.

அதிக இலாபம் ஈட்டும் பேராசையால் பசுவின் உடலியல் தொழிற்பாடுகள் இரசாயன முறையில் முன்தள்ளப்படுகின்றன. சாதாரண நிலையில் நாளொன்றுக்கு ஒரு பசு தனது கன்றுக்கு ஊட்டும் பொருட்டு மூன்று லீற்றர் பாலைச் சுரக்கும். ஆனால் பாற்பண்ணைப் பசுக்கள் 25—30 லீற்றர் பாலைச் சுரக்கின்றன.

தொடர்ந்துபாலைப்பெறும் நோக்கில் பசுக்கள் ஒரேநேரத்தில் கன்றுத் தாச்சியாகவும் வருடத்தில் 9 மாதங்களுக்கு பால் சுரப்பவையாகவும் உள்ளன. கன்று ஈன்று மூன்று மாதங்களில் பால் ஏராளமாகச் சுரந்து கொண்டிருக்கும் வேளையிலேயே பண்ணைக் கறவைப் பசுக்கள் செயற்கை முறையில் கருத்தரிக்க வைக்கப்படுகின்றன.

உற்பத்தியாகும் ஒவ்வொரு ஏழாயிரம் லீற்றர் பாலுக்கும்

(8 ஆம் பக்கம் பார்க்க)

''சண்டே லீடர்'' ஆங்கிலப் பத்திரிகையின் 'Focus' என்ற பத்தியில் வெளியான இக்கட்டுரையை எழுதியவர் எம். எம். வீரரட்ண. இதனைத் தமிழாக்கம் செய்தவர் ச. பொ. வரதராசன் பீ. ஏ. (செயலாளர், யாழ். மாவட்ட பசுவதைத் தடைச் சங்கம்).

# புனிதத்தை அழிக்க முடியாது

புத்தர் பிறந்தபோது அவர் புனிதத்தின் வடிவமாகத் தோன்றினார்; தள்ளிநின்று அவரது முகத்தைக் கண்டவர்கள் கூட சடங்குகளும் கிரியைகளும் கலந்த மதத்தை விட்டு விட்டுத் துறவறத்தைத் தழுவி உய்வு பெற்றனர்.

ஆகவே தேவர்கள் ஒன்றுகூடினர்; 'நாம் அழிந்தோம்' என்றே முடிவு கட்டினர் ஏனெனில் கிரியைகளைக் கொண்டே தேவர்களில் பலர் வாழ்ந்து வந்தனர். யாகங்களில் இடப்படும் உணவுகள் தேவர்களைச் சேர்கின்றன; ஆனால் இப்போதோ அவை யாவும் மறைந்தன. தேவர்கள் பசியால் வாடத் தொடங்கினர். அவர்களது பலம் குன்றிவிட்டது.

எனவே 'எப்படியாவது இவரை அடக்கிவிட வேண்டும். நம்மை வாழவிடாத அளவிற்கு இவர் தூயவர்' என்று எண்ணிய அவர்கள் புத்தரிடம் வந்து, 'ஐயனே! உம்மிடம் ஒன்று வேண்ட வந்துள்ளோம். நாங்கள் ஒரு பெரிய யாகத்தைச் செய்து முடிக்க விரும்புகிறோம். அதற்குப் பெரிய தீ மூட்ட வேண்டும். அதற்கான தூய இடத்தை உலகெங்கும் தேடினோம், இப்போது கண்டுபிடித்து விட்டோம் நீங்கள் கீழே படுத்துக்கொண்டால் உங்கள் மார்பின்மீது அந்தப் பெருந்தீயை மூட்டிக்கொள்வோம்' என்று தெரிவித்தனர்.

புத்தரும், 'நல்லது. உங்கள் பணியைத் தொடங்குங்கள்' என்றார்

தேவர்கள் புத்தரின் மார்பில் வேள்வித் தீயை எழுப்பினர். அவர் இறந்துவிட்டதாக எண்ணினர்.

ஆனால் அவர் இறக்கவில்லை.

இதைக் கண்ட தேவர்கள் அங்குமிங்கும் ஓடி, 'நாம் அழிந்தோம்' என்று புலம்பினர். விடாமல் புத்தரைத் தாக்கத் தொடங்கினர், அதுவும் பயன்படவில்லை.

அப்போது கீழிருந்து குரல் எழுந்தது; 'ஏன் இந்த வீண் முயற்சிகளையெல்லாம் செய்கிறீர்கள்?' என்று கேட்டது.

'புத்த தேவனே! உம்மைக் காண்பவர்கள் அனைவரும் தூய்மையாகி உய்வடைந்து விடுகின்றனர். இனி எங்களை யார் வழிபடுவார்கள்?' என்று கேட்டனர் தேவர்கள்.

'உங்கள் முயற்சி வீண். ஏனெனில் தூய்மையை ஒரு போதும் அழிக்க முடியாது' என்றது அந்தக் குரல்.

— சுவாமி விவேகானந்தர்
(நன்றி: விவேகக் கதைகள்)

# நாடெங்கும் கல்லறைகள்!

## 'வீரம்' என்ற போர்வையால் மூடப்படும் சோகக் கதைகள்!!

தற்போது நாடெங்கும் கல்லறைகள். யுத்தத்தில் அகால மரணமடைபவர்களை அரசியல்வாதிகள் உட்படப்பலர் வீரர்கள் என்று கூறி அத்துடன் கை கழுவி விடுகிறார்கள் வீரம் என்ற போர்வையால் மூடப்பட்ட எத்தனை சோகக் கதைகள்? இவை குறித்து ''லக்பிம'' சிங்கள வார இதழில் கிருஷ்ண விஜேபண்டார என்பவர் எழுதிய கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.

தற்போது வீதியால் செல்லும் போது பல இடங்களிலும் கல்லறைகளைக் காணக் கூடியதாய் இருக்கிறது. இந்தக் கல்லறைகளுக்கு இராணுவச் சீருடையை ஒத்த உருமறைப்பு வர்ணம் தீட்டப் பட்டுள்ளது. இவற்றை விட இராணுவத்தின் தோற்றத்தையுடைய பஸ் தரிப்பு நிலையங்களைப் பல்வேறு இடங்களில் காணக் கூடியதாயுள்ளது.

இவையெல்லாம் எதற்காக அமைக்கப்பட்டுள்ளன? வட பகுதி யுத்தத்தின்போது பலியான தென்பகுதி இளைஞர்களின் ஞாபகார்த்தமாகவே இவை அமைக்கப்பட்டுள்ளன. இந்தக் கல்லறைகள் மற்றும் பஸ் தரிப்பு நிலையங்கள் ஆகியனவற்றில் யுத்தத்தில் உயிரிழந்த இளைஞர்களின் ஞாபகமாக இராணுவச் சீருடையை ஒத்த வர்ணம் தீட்டப்பட்டுள்ளது.

தலைநகரில் இருந்து செல்லும் வீதிகளின் மருங்குகளில் இவ்வாறான இராணுவத் தோற்றத்தில் அமைந்த கல்லறைகளைப் பெருமளவில் காண முடிகிறது.

நாட்டின் வடக்கு — கிழக்கில் மட்டுமே யுத்தம் நடைபெறுகிறது. இருப்பினும் நாட்டின் ஏனைய பகுதிகளில் குண்டு வெடிப்புகளும் வன்முறைகளும் விடுதலைப்புலிகளால் மேற்கொள்ளப்படுகின்றது. எனவே இன்று கொழும்பிலும் ஏனைய மாகாணங்களிலும் இராணுவச் சீருடையை ஒத்த வர்ணத்தில் அமைந்த சோதனைச் சாவடிகள் பெரும் எண்ணிக்கையில் அமைக்கப் பட்டுள்ளன. இராணுவத் தோற்றத்தில் அமைந்த கல்லறைகள், பஸ் தரிப்பு நிலையங்கள் மற்றும் சோதனைச் சாவடிகள் முற்று முழுதாக யுத்தத்தின் தோற்றத்தையே எம் கண்முன் தோற்றுவிக்கின்றன. சுருங்கக் கூறின் நாட்டின் தென்பகுதியில் கூட ஒரு போர்ச் சூழலே உருவாகி வருகிறது. இந்த நிலைமை ''யுத்தம் வீடுவரை வந்து விட்டது'' என்ற உணர்வை உண்டாக்கியுள்ளது.

ஈழத்தின் தலைநகரம் என விடுதலைப் புலிகளால் கூறப்பட்ட யாழ்ப்பாணத்திலும் சில வருடங்களுக்கு முன்னர் இராணுவத் தோற்றத்தில் அமைந்த பல இடங்கள் அமைக்கப்பட்டிருந்தன. அக்காலத்தில் அவை இராணுவத் தோற்றத்தை விட கரந்தடிப் படையின் தோற்றத்தையே வெகுவாகத் தோற்றுவித்தன. அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் சந்திக்குச் சந்தி விடுதலைப் புலிகளின் தலைவர்களின் படங்கள் வரையப்பட்டிருந்தன. கரந்தடிப் படையினருக்குரிய உருமறைப்பு ஆடைகளை அணிந்து நவீனரக ஆயுதங்களை ஏந்திய தோற்றத்தில் அந்தப் படங்கள் வரையப் பட்டிருந்தன. இவற்றில் சில 25, 30 அடி உயரத்தைக் கொண்ட 'கட்அவுட்டுகளாக'' இருந்தன. இவ்வாறான போராளிகளின் உயிரோவியங்கள் மற்றும் ''கட் அவுட்டுகள்'' அமைக்கப்பட்ட இடங்களில் பொது மக்கள் மலர் தூவி, விளக்கேற்றி அஞ்சலி செய்ததையும் அக்காலத்தில் காணக் கூடியதாக இருந்தது. பருத்தித்துறை நகரின் மத்தியில் அமைக்கப்பட்டிருந்த மிகவும் உயரமான ''கட்அவுட்டுக்கு'' அங்கு சென்ற அனைவரும் அஞ்சலி செலுத்தினர்.

இவ்வாறான உயிரோவியங்கள், கட்அவுட்டுகள் ஆகியனவற்றை விட அப்போது விடுதலைப் புலிகள் மாவீரர் துயிலும் இல்லங்களையும் அமைத்திருந்தனர். இந்த மாவீரர் துயிலும் இல்லங்களில் போரில் உயிர் நீத்த ஆயிரக்கணக்கான புலி வீரர்களின் உடல்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ளன.

விடுதலைப் புலிகளைப் பொறுத்த வரையிலும் போரில் மடிந்த அவர்களது உறுப்பினர்கள் மாவீரர்களே. எனவே தான் விடுதலைப் புலிகள் மாவீரருக்காக உயிரோவியங்கள், கட் அவுட்டுகள் மற்றும் மாவீரர் உயிரோவியங்கள் ஆகியனவற்றை அமைத்தனர்.

நாட்டின் தென் மாகாணங்களிலும் நிலைமை இதுவே தான். வடபகுதியில் இடம் பெறும் யுத்தத்தில் பலியாகும் அனைத்துப் படைவீரர்களும் தென் பகுதியில் மாவீரர்கள் எனக் கருதப்படுகிறார்கள். நாடெங்கும் அமைக்கப்பட்ட இராணுவத் தோற்றத்தில் அமைந்த கல்லறைகள், பஸ் தரிப்பு நிலையங்கள், ஒரு சில படை அதிகாரிகளின் உயிரோவியங்கள், இராணுவத்தினாலே அமைக்கப்பட்ட ''படைவீரர் நினைவாலயங்கள் ஆகியனவும் இந்நோக்கிலேயே அமைக்கப்பட்டுள்ளன.

அக்காலத்தில் வீரத்தை முன்னெடுக்கும் கண்காட்சிகளை விடுதலைப்புலிகள் காரணமில்லாமல் நடத்தவில்லை. தமிழீழத் தாயகத்தை மீட்டெடுக்கவே தங்கள் உயிர்களைத் தியாகம் செய்ய ஆயுதமேந்தியுள்ளோம் என்ற எண்ணத்தை வடபகுதி மக்களின் சிந்தனையில் பதிக்கவே இவ்வாறு செய்தனர். இதன் மூலம் தங்களது கரந்தடிப் போராட்டத்திற்கு மக்களின் ஆதரவைப் பெற முயன்றனர்.

தற்போது தென்பகுதியிலும் இம் முறையே பின்பற்றப்படுகிறது. கண்காட்சிகள் மூலம் இளைஞர்களை போர் நடவடிக்கைகளில் ஈர்க்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பொதுமக்கள் இவற்றை ஏனோ தானோ என்ற நோக்கில் பார்த்துவிட்டுச் செல்கிறார்களேயன்றி கல்லறைகள், பஸ்தரிப்பு நிலையங்கள், உயிரோவியங்கள் மற்றும் கட்அவுட்டுகள் ஆகியன அமைக்கப்பட்டதன் நோக்கம்பற்றி அவர்கள் சிந்திப்பதில்லை.

இந்தக் கல்லறைகளுக்குள், உயிரோவியங்களுக்குள் இந்த நாட்டிலுள்ள இளைஞர்கள், தந்தைமார்கள், தாய்மார்கள் புதைக்கப்பட்டுள்ளனர் என்பதை அவர்கள் சிந்திப்பதில்லை. இவ்வாறு நினைவூட்டும் மரங்கள், கற்பாறைகள், நினைவுத் தூபிகள் ஆகியன ஆயிரக்கணக்கான இளைஞர்கள் யுத்தத்தில் பலியானதை எடுத்துக் காட்டுகின்றன. ஆனால் மக்கள் அதுபற்றிச் சிந்திப்பதில்லை.

யுத்தத்தில் அகால மரணமடைபவர்களை வீரர்கள் என அரசியல்வாதிகள் உட்படப் பலர் கூறி அத்துடன் கைகழுவி விடுகிறார்கள்.

சமூகத்தில் புதியதொரு பாதிப்பை யுத்தம் உருவாக்குகிறது. யுத்தம் காரணமாகப் பலர் விதவையாகின்றனர்; பலர் அங்கவீனர்கள் ஆகின்றனர். யுத்தத்தில் ஊனமுற்ற சிப்பாய் ''ஊனமுற்ற போர் வீரராகிறார் – போரில் பலியான சிப்பாயின் மனைவி போர்வீரனின் விதவையாகிறாள்.'' ஊனமடைவதோ, விதவையாவதோ அகாலத்தில் இடம்பெறுவது மிக வேதனையான நிகழ்வாகும். வீரம் என்ற போர்வையால் மூடப்பட்டு இங்கு யதார்த்தம் மறைக்கப்படுகிறது

**தமிழில்: சுஜனி**

உண்மையில் இவை யாவற்றுக்கும் காரணம் பொதுப் படையாகக் கூறப்படும் வீரம் என்பது அல்ல. யுத்தம் காரணமாக ஆயிரக்கணக்கான உயிர்கள் அகாலத்தில் காவு கொள்ளப்படுகின்றன.

யுத்தம் நீடித்துக்கொண்டு போக அதன் காரணமாக ஆயிரக் கணக்கான உயிர்கள் பலியாவதையும் ஊனமடைவதையும் விதவைகளாவதையும் வீரம் என்ற போர்வையால் மூடி மறைக்க முயல்வது உண்மைக்குப் புறம்பான வாதமாகும். வடக்கிலும் தெற்கிலும் இடம்பெறும் அநியாயமான உயிரிழப்புகளை நிறுத்துவதற்கு யுத்தத்தை உடனடியாக முடிவுக்குக் கொண்டுவர வேண்டும். அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது மிகவும் அவசரமான தேவையாகும்.

இருப்பினும் நாட்டை ஆள்பவர்களுக்கோ, யுத்தத்தில் ஈடுபடுபவர்களுக்கோ இந்தத் தேவை இருப்பதாகத் தெரியவில்லை. இதனால் தான் மனித உயிர்களைக் காவு கொள்ளும் யுத்தமாக இது தொடர்ந்து கொண்டே போகிறது. ★

# குறை காண்பவர்களாக அன்றி நிறை காண்பவர்களாக வாழுங்கள்!

இன்று திருச்சபைகளிலும் சரி, பொது நிறுவனங்களிலும் சரி நாம் காணும் ஒரு காரியம் குறை கண்டு பிடித்தல், மற்றவர்களைக் குறை கூறுவதிலே குறியாக இருப்பவர்கள் பலர். தாமும் நல்லது செய்யாமல், மற்றவர்கள் செய்யும் நல்லவற்றில் தேடிப்பிடித்துக் குறை காணும் பலர் இன்று நம் மத்தியில் புரையோடிப்போயிருக்கிறார்கள்.

இவ்வாறானவர்கள் குறை காண்பவர்களாக மட்டும் இருந்து விடுகிறார்களேயொழிய அந்தக் குறைகளை நிவர்த்தி செய்பவர்களாக இருப்பதில்லை. இயேசு கூறினார். ''நீ மற்றவன் கண்ணிலுள்ள தூசியைப் பார்த்துக் கொள்ள முன்பாக உன் கண்ணிலுள்ள துரும்பைக் கவனி.'' இயேசு பெருமான் இப்பூவுலக வாழ்வில் குறை காண்பவராக மாத்திரமல்ல அக்குறைகளுக்கான பரிகாரங்களையும் முன் வைத்தார்.

குற்றவாளியொருவன் சுற்றவாளியாக மாறுவதற்கான வழிகளையும் காட்டினார். ஆனால் இன்று பலர், மற்றவர்களைக் குற்றவாளிகள் என அடையாளப்படுத்திக் கொள்ள மட்டுமே விரும்புகின்றனர்,

இவ்வாறான வெளிவேடதாரிகளாக இருக்க விரும்புவோரை இறைமகன் இயேசு கண்டித்தார். ''நீ விரதம் இருக்க விரும்பினால், எண்ணெய் வைத்து, குளிர்மையாக இருந்து விரதம் அனுஷ்டிப்பதை விட்டு விட்டு வாடலாக இருந்து உன்னை நீ பிரசித்தப்படுத்தாதே'' என அவர் கூறினார்.

தமது குற்றங்களை மறைப்பதற்காக, தம்மை வெளியில் சுற்றவாளிகளாகக் காட்டிக் கொள்வதோடு மட்டுமல்லாது, மற்றவர்களது குறைகளைக் காட்டி, ''அவன் செய்யும் குற்றங்களை நான் செய்யவில்லை. எனவே நான் நல்லவன்'' என மறைமுகமாகத் தன்னைப் பிரசித்தப் படுத்தி ஒரு மனவியல் ரீதியான தோற்றத்தைக் கண்டு கொள்ளும் பலரும் எம்மத்தி

## ஞாயிறு நற்பிரசாதம்

யில் உள்ளனர். இவ்வாறான செயற்பாடுகளால், மனிதர்களாக வாழ வேண்டிய நாம் பலர் நடிகர்களாக வாழ்ந்து வருகிறோம்.

ஏனையவர்கள் குற்றவாளிகளாக இருப்பது பலருக்குப் பிடித்தமான ஒரு காரியமாக இருக்கிறது. ஏனெனில் மற்றவர்களை விமர்சித்துத் தம்மை நீதிமான்களாகக் காட்டிக் கொள்கிற அவர்களுடைய செயல்களுக்கு அதுஉறுதுணையாக அமைகின்றது.

நடத்தை சரியில்லாத ஒரு பெண்ணை இயேசுவின் முன்னால் கொண்டு வந்து சிலர் நிறுத்தியபோது, அந்தச் சிலரது எண்ணமோ, அவளைக் குற்றவாளியாக அடையாளப்படுத்தி, அவளது வாழ்வினைச் சீர்குலைத்து விடுவதிலேதான் குறியாக நின்றது. அத்துடன் நிற்காமல் தங்கள் குற்றங்களை மறைத்து விடுவதும் அவர்களது எண்ணமாக இருந்தது. எனினும்

அருள்திரு.
**பி. தேவதாஸ்**

அவ்விடத்தில் நீதிபரராகச் செயற்பட்ட எம்பெருமான் அவள் திருந்தி வாழ்வதற்கான வழியைக் காட்டுகிறார். எனவே எமது வாழ்வு பழிசொல்கிற வாழ்வாக அல்ல வழி சொல்கிற வாழ்வாக அமைய வேண்டும் என்பதே எம்பெருமான் எமக்குக் காட்டிய வழி.

அவரது வழியிலேயே நாம் செல்ல வேண்டியவர்களாக இருக்கின்றோம். குறை காண்பவர்களாக நாம்வாழாமல், நிறை காண்பவர்களாக நாம் வாழ்ந்தால் எம் கண்களுக்குப்பல நிறைகள் தெரியும்.

ஆகவே எமது மதத்தைக் காப்பதற்கு முன்பாக மனிதத்தைக் காப்பவர்களாக, மனிதம் சரியாக வாழவேண்டிய வழியில் நாமும் வாழ்ந்து மற்றையோரையும் வாழ்விக்கத் தலைப்படுவோமாக.

சிந்திப்போம்! செயற்படுவோம்!! ★

# திருக்குறளை வசனத்தில் படித்து விளங்குவதற்கு உதவும் நூல்

## நூல் வரிசை

நூல்: திருக்குறள் வசனச் சுருக்கம்
ஆசிரியர்:
வேலணையூர் பண்டிதர் மா. மாணிக்கம்

நூலை விமர்சிக்கும் முன்னர் நூலை ஆக்கியோனையும் நோக்குவது தமிழ் மரபு. வேலணையூர் பண்டிதர் மா. மாணிக்கம் அவர்கள் தமிழ் இலக்கிய, இலக்கணங்களை மரபு பிறழாமற் கற்ற அறிஞர். முப்பத்தைந்து ஆண்டுகள் இலக்கியச் சொற்பொழிவுகளும் சமயச் சொற்பொழிவுகளும் நிகழ்த்திய சிறந்த சொற்பொழிவாளர். அழகொல்லை விநாயகர் ஊஞ்சல் பாட்டுப் பாடிய கவிஞர். கந்தபுராணச் சுருக்கம் எழுதிச் சமயத்துக்கும் உரை நடைக்கும் தொண்டு செய்த சமயப் பெரியார். ஆசிரியப் பணியைத் தொழிலாகக் கொண்டிருந்தவர்.

திருக்குறளில் பெரும் ஈடுபாடு கொண்டிருந்த இவர் திருக்குறள் காட்டும் வழியில் வாழ்ந்து வரும் பண்பாளர். தமது வாழ்வைச் செப்பமுற அமைப்பதற்குத் திருக்குறள் தமக்கு உதவியதுபோல ஏனையோர்க்கும் உதவ வேண்டும் என்னும் நோக்கால் திருக்குறள் முழுவதையும் உரைநடையில் எழுதித் திருக்குறள் வசனச் சுருக்கம் என்னும் பெயரில் நூலாக வெளியிட்டுள்ளார்.

திருக்குறளைக் கற்கவும் விளங்கிக்கொள்ளவும் பரிமேலழகரின் உரை பெரும் துணை புரிகிறது. சாதாரண தமிழ் அறிவினர்க்கும் திருக்குறள் விளங்கவேண்டும் என்னும் ஆர்வம் காரணமாக வெளிவரும் இந்நூல் ஆரம்பக் கல்வி அறிவினர்க்கும் விளங்கும் அளவுக்கு எளிமையாக உள்ளது.

அறம், பொருள், இன்பம் வீடு அடைதல், நூற்பயன் என்ற இலக்கணத்துக்கு இலக்கியமாக விளங்கும் திருக்குறளை எல்லோரும் உரைநடை வடிவில் என்றாலும் கற்றுணர வேண்டும் என்ற தமது ஆர்வத்தை இந் நூல் மூலம் நிறைவு செய்திருக்கிறார் வேலணையூர் பண்டிதர் மா. மாணிக்கம்.

பழந்தமிழ் இலக்கியங்களில் ஆழ்ந்த புலமை கொண்ட நூலாசிரியர் காலத்துக்கு ஏற்ற இலகுநடையில்— இனியநடையில் — வாழ்வுக்கு ஆதாரமான — வாழ்வின் விளக்கமான நூலைத் தந்திருப்பது காலத்திற்குச் செய்த உதவியாகும். ★

''சந்திரமௌலி''

# காணாமற்போன தம்பதியரின் 2பிள்ளைகளை இருள் சூழ்ந்த எதிர்காலம் பயமுறுத்துகின்றது

## பெற்றோர் திரும்பி வருவார்கள் என்ற அவர்களின் நம்பிக்கை சிதறிவிட்டது

**நேரில் சந்தித்தவர் கேசரி**

யாழ். குடாநாட்டில் காணாமற் போனதாகக் கூறப்படும் ஒவ்வொருவரும் காணாமற் போனதன் பின்னணியை ஆராய்கின்றபோது பல அதிர்ச்சித் தகவல்கள் வெளியாகிக் கொண்டேயிருக்கின்றன.

இந்த வகையில் அரியாலை, நெடுங்குளம் பகுதியில் ஒன்றாகக் காணாமற் போன இளம் தம்பதியரான சுரேஸ்வரன், சுமதி ஆகியோருக்கு நடந்த கதி குறித்து கிருசாந்தி கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட இராணுவ கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ பரபரப்பான— அதிர்ச்சி தருகின்ற— தகவல்களை நீதிமன்றத்தில் வெளியிட்டிருந்தார்.

இதனைத் தொடர்ந்து செம்மணிப் பிரதேசத்தில் அவரினால் அடையாளம் காட்டப்பட்ட புதைகுழியிலிருந்து மீட்கப்பட்ட — ஒன்றாகக் காணப்பட்ட — இரு எலும்புக்கூடுகள் இந்தத் தம்பதியினராக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்பட்டது. அவற்றுடன் காணப்பட்ட உடுதுணிகள் மற்றும் பொருள்களும் அவர்களுடையவை என்றும் பின்னர் அடையாளம் காணப்பட்டுள்ளன.

1996 பிற்பகுதியில் ஒரு நாள் இரவு அரியாலைப் பகுதியில் பக்கத்து வீட்டில் தமது குழந்தைகளுடன் அமர்ந்திருந்து ரி.வி. பார்த்துக் கொண்டிருந்தனர் அந்த இளம்தம்பதியினர். அப்போது முகமூடி அணிந்திருந்த | சீருடையினர் எனச் சந்தேகிக்கப்படுகின்ற — சிலர் அங்கு வந்தனர். பிள்ளைகள் இரண்டையும் பக்கத்து வீட்டுக்காரரிடம் ஒப்படைத்து விட்டு இளம் தம்பதியினரைக் கூட்டிச் சென்றனர். அதற்குப் பின்னர் அவர்கள் இருவர் குறித்துத் தகவல் எதுவும் இல்லை. அவர்கள் திரும்பவே இல்லை.

இந்தச் சம்பவம் நடந்து நான்கு வருடங்களின் பின்னர் இவர்களின் இரு குழந்தைகளையும் நான் சந்தித்து உரையாட முடிந்தது.

சுரேஷ்வரன் தஜீபா (வயது 9), சுரேஷ்வரன் பிரகாஷ் (வயது 8) ஆகிய இரு குழந்தைகளும் தற்பொழுது ஊரெழு மேற்கில் தமது அம்மம்மாவுடன் வளர்ந்து வருகின்றனர்.

ஊரெழு மேற்கில் ஒரு கலட்டிக் காணியில் (அதுவும் சொந்தமில்லாதது) ஓலைக் குடிசையில் அடிப்படை வசதிகள் எதுவுமற்ற நிலையில் வாழும் இந்தக் குழந்தைகளைச் சந்திப்பதற்கு நாம் சென்றபோது குழந்தைகள் இருவரும் பாடசாலைக்குச் சென்றுவிட்டனர்.

எம்மை அறிமுகப்படுத்திய போது குழந்தைகளின் பேர்த்தியார் திருமதி சொக்கலிங்கம் இரத்தினம் பாடசாலையிலிருந்து பிள்ளைகளை வரவழைத்தார்.



தம்பி பிரகாஷும் அக்கா தஜீபாவும்

### கபடமில்லாத பதில்

புழுதிபடிந்த பாடசாலைச் சீருடையுடன் புத்தகப் பைகளைச் சுமந்து கொண்டு இருவரும் எமது முன்னே வந்தனர்.

எம்மை அதிசயமாகப் பார்த்தவர்களிடம் ''எப்படிச் சுகமாக இருக்கிறீர்களா?'' என்று கேட்டுப் பேச்சை ஆரம்பித்தோம்.

''நேற்று யாழ். மத்திய கல்லூரியில் உங்கடை அம்மாவின் மூக்குத்தியைப் பார்த்தீர்களே. அது வேண்டுமா?''— என்று தஜீவாவிடம் கேட்டோம்.

''எங்களுக்கு மூக்குத்தியும் வேண்டாம். ஒன்றும் வேண்டாம். எங்கடை அம்மாவும் அப்பாவும்தான் வேண்டும்'' என்று சிணுங்கினார்கள் அவர்கள்.

''உங்கடை அம்மா, அப்பா எங்கே?'' என்றபோது—

''அவர்கள் எங்கிருக்கிறார்கள் என்று தெரியவில்லை? அவர்கள் எம்மிடம் வருவார்கள் என்றுதான் அம்மம்மா சொல்கின்றா'' என்று கபடமின்றிப் பதிலளித்தனர் இருவரும்.

குறுக்கிட்ட பேர்த்தியார் ''இருவருக்கும் தாயினதும் தந்தையினதும் நினைவு வரும் போது கேட்பார்கள். நங்கள் ஆறுதலுக்காக அவர்கள் வருவார்கள் என்று சொல்லி வைப்போம்'' என்றார்.

தஜீவாவின் தம்பி பிரகாஷ் நாம் கேட்கும் கேள்விகளுக்கு தலையாட்டிக் கொண்டும் சிரித்துக் கொண்டுமிருந்தார்.

''உங்களுக்கு வேறு பாடசாலையில் சென்று படிக்க விருப்பமா?' என்று அங்கு வந்த வண. பிதா ஒருவர் கேட்ட பொழுது ''ஆம்'' என்று இருவரும் தலையாட்டினார்கள்.

''அக்கா ஓர் இடத்திலும் தம்பி ஓர் இடத்திலும் தங்கி இருந்து படிக்க விருப்பமா?'' என்றும் அவர் கேட்டார். அதற்கு ''நாங்கள் இருவரும் ஒன்றாக இருப்போம் ''என்று பதில் வந்தது.

''தாய் தந்தையில்லாத பிள்ளைகளைப் பிரிக்கநினைக்காதையுங்கோ'' என்று பேர்த்தியார் கூறினார்.

அரியாலையில் காணாமற் போன தனது மகள் சுமதி மற்றும் மருமகன் குறித்து பேர்த்தியார் நினைவு கூர்ந்தார்.

### வெள்ளிக்கிழமை அன்று நடந்தது

அவர்கள் காணாமற்போன அன்று ஒரு வெள்ளிக்கிழமை நான் அவர்களது வீட்டுக்குச் சென்றேன். விரத நாள் என்பதால் நீராடிவிட்டு நில நிறப் பாவாடையும் கறுத்த ரீசேட்டும் அணிந்திருந்தார்.

''இடம்பெயர்வோடுவன்னி சென்றிருந்த சுமதியையும் கணவனையும் யாழ்ப்பாணத்துக்கு வருமாறு நாம்தான் அழைத்தோம். கிழமைக்கு ஒரு தடவை நான் அரியாலை சென்று சுமதியையும் பிள்ளைகளையும் பார்த்து வருவேன். இப்படி நடக்கும் என்று தெரிந்திருந்தால் நாம் வன்னியிலே அவர்களை வாழ விட்டிருக்கலாம்''— என்று கூறினார்.

'இவர்கள் காணாமற்

(10ஆம் பக்கம் பார்க்க)



பெற்றோரை இழந்த இரண்டு பிள்ளைகளும் பேர்த்தியாரும் வசிக்கும் குடிசை இதுதான்

**சூரியகாந்தி**

**உதயன் ஞாயிறு சிறப்பம்சம்**

---

- பேச்சு பற்றிய சகல விவரங்களையும் இந்தியாவுக்கு இலங்கை தெரிவிக்கும்.
  - ★ இந்தியாவைத் தான் விலக்கி வைக்கவில்லை என்பதை இலங்கை விளக்கி வைக்கும்!
- வேல்ஸ் இளவரசி டயானா அணிந்த ஆடை ஒன்று 40 இலட்சம் துண்டுகளாக வெட்டப்பட்டு விற்கப்படுமாம்; 10 இலட்சம் டொலர் கிடைக்குமாம்!
  - ★ ஒரு பெண் ஆடை, பல் ஆடையாக்கிப் பொன் ஆடையாகப் போகிறது!
- கைதிகளின் எண்ணிக்கை அதிகரிப்பதால் யாழ். சிறைச்சாலை விஸ்தரிக்கப்படவுள்ளதாம்!
  - ★ யாழ்.குடாநாடே ஒரு திறந்த வெளிச் சிறைச்சாலையைப் போல் இருக்கும் போது, ''விஸ்தரிப்புக்கு எங்கே ஐயா இடம் இருக்கிறது? '' என்று கேட்கிறார் ஒரு குடிமகன்.
- அரசமைப்புச் சீர்திருத்தம் சம்பந்தமாகத் தமிழ்க் கட்சிகளின் தலைவர்களுடன் ஜனாதிபதி தனித் தனியாகவும் பேசி வருகிறார்!
  - ★ தனித்தனியாகப் பேசுவதன் மூலம் வடக்கையும் கிழக்கையும் தனித்தனியாக வைத்திருப்பதற்கு வழி ஏற்படும் என நம்புகிறாரோ?
- 21 ஆம் நூற்றாண்டிலே சக்தி வாய்ந்த வல்லரசாக இந்தியா திகழுமாம்!
  - ★ சர்வோதயத்தைக் கைவிட்டு சர்வாபுநத்தைக் கைக்கொள்ளப் போகிறது என்பதா?

## எதிரொலி..

**- இடியன் -**

- ஐரோப்பா, அமெரிக்கா, மத்தியகிழக்கு நாடுகளில் புதிய வைரஸ் காய்ச்சல் அதி வேகமாகப் பரவுகின்றது.
  - ★ நவீன விஞ்ஞான வளர்ச்சி புதிய மருந்துகளையும் உருவாக்குகின்றது; புதிய நோய்களையும் உருவாக்குகின்றது, பார்த்தீர்களா?
- இனப்பிரச்சினைக்குரிய தீர்வு சம்பந்தமாகத் திருத்தி அமைக்கப்பட்ட யோசனை குறித்துத் தமிழ் மக்கள் அதிருப்தி அடைந்துள்ளனராம்!
  - ★ இன்னும் சில நாள் சென்றால் 'அதிருப்தி' 'அதிக திருப்தி' ஆக மாறினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.
- கொழும்புத்துறைக் கடற்கரையில் பொச்சு மட்டைகளைப் புதைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாம்.
  - ★ ஏழை மக்களின் குடிசைக் கைத்தொழிலுக்கு ஆதாரமான பொச்சுகளைப் புதைப்பதற்கே அனுமதி பெறவேண்டும் என்றால், தமிழ் மக்களின் எத்தனை உரிமைகள் புதைக்கப்பட்டிருக்கின்றன என்பதை ஊகிக்கலாம்!
- யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும்; தவறினால் எதிர்காலச் சந்ததி எம் மீது பழி போடும் என்கின்றார் பிரதமர்!
  - ★ எதிர்காலச் சந்ததியை விடுங்கள்: இக்காலச் சந்ததி உங்களையும் கணவரையும் வாழ்த்தவா செய்கிறது?

# 4ஆம் ஆண்டு நினைவலைகள்

## செல்வி ஜெயராணி மண்டலநாயகம்

(மானிப்பாய்)

27-02-2000

நாளை விடிந்தாலும்
ஆறாது எம் துயரம்
நீங்காது உன் நினைவு
வற்றாது எம் அன்பு.

உன் அன்புக்குரிய

**குடும்பத்தினர், உறவினர்.**

86, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம். (73954)



# 25ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் வஸ்தியாம்பிள்ளை இராசதுரை

(ஸ்தாபகர், வசந்தா பேக்கறி, ஊர்காவற்றுறை)

மண்ணில் மலர்வு: 09-12-1909 — விண்ணில் உறைவு: 27-02-1975

அன்னாரின் ஆன்ம சாந்திக்கான நினைவுத் திருப்பலிகள் இன்று (27-02-2000) ஞாயிற்றுக்கிழமை மாலை 5-00 மணிக்குக் கரம்பொன் புனித செபஸ்தியார் ஆலயத்திலும் கனடா ரொறன்ரோ மரிய கொரற்றி ஆலயத்திலும் பம்பலப்பிட்டி லிளிபேட் பீலேஸ் நிர்மலன் சிற்றாலயத்தில் காலை 8-00 மணிக்கும் 28-02-2000 திங்கட்கிழமை காலை 6-15 மணிக்கு யாழ் குருநகர் புனித யாகப்பர் ஆலயத்திலும் 29-02-2000 செவ்வாய்க்கிழமை திருகோணமலை புனித அந்தோனியார் ஆலயத்திலும் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும்.

வாழ்வில் நேசித்தவர்களே; மரணத்திலும் மறவாதீர்கள்.

அன்புடன் நினைவுகூரும்

**மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

கரம்பொன்,
ஊர்காவற்றுறை. (73963)


# தொழுநோய் குறித்து வீடியோ

திருநெல்வேலி, பெப். 27

தொழுநோய் பற்றியும் அதற்கான தடுப்பு முறைகள் பற்றியும் விளக்கும் தமிழ் மொழியிலான கலர் வீடியோ பிரதி ஒன்று யாழ். சுகாதாரத்திணைக்களத்திற்கு கொழும்பிலுள்ள தொழுநோய்த் தடுப்புப் பிரிவினால் அண்மையில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் தயாரிக்கப்பட்ட இந்த வீடியோப் படப்பிரதி யாழ். மாவட்டத்திலுள்ள சகல சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் பொது சுகாதார பரிசோதகர் மூலம் பொது மக்களுக்கு காண்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (3-135)

# பேராயர் நூல்கள் அன்பளிப்பு

நெடுந்தீவு, பெப். 27

நெடுந்தீவு பொது நூலகத்திற்கு யாழ்ப்பாணம் தென்னிந்தியத் திருச்சபைப் பேராயர் அருட் கலாநிதி எஸ். ஜெபநேசன் பெறுமதியான நூல்களை அன்பளிப்புச் செய்துள்ளார்.

இதற்கென ஒரு தொகுதி நூல்களை பேராயர் ஜெபநேசன் அவர்கள் நெடுந்தீவு தென்னிந்தியத் திருச்சபைப் போதகர் வண. ஐ. எஸ். ஆனந்தராஜன் ஊடாக பிரதேச சபைத்தலைவர் அ. வெ. அரியநாயகத்திடம் கையளித்துள்ளார். (அ-111)

# வெங்காய அறுவடை ஆரம்பம்

புன்னாலைக்கட்டுவன், பெப். 27

புன்னாலைக்கட்டுவன், குப்பிளான், ஈவினைப் பிரதேசங்களில் விவசாயிகள் வெங்காய அறுவடையை ஆரம்பித்துள்ளனர்.

இம்முறை வெங்காயப் பயிர்ச் செய்கை கடும்மழை, நோய்த் தாக்கம் போன்றவற்றால் பெரும் பாதிப்பு ஏற்பட்டதை அடுத்து வெங்காய விளைச்சல் பெருமளவு குறைந்துள்ளது. மேலும் பயிரின் பெரும் பகுதி அழுகிக்காய் விழுந்ததனால் இவற்றை சந்தைப்படுத்த முடியாமல் விவசாயிகள் கஷ்டப்படுகின்றனர்.

விளைச்சல் பாதிக்கப்பட்ட வெங்காயங்களை அறுவடை செய்து சந்தைக்கு எடுத்துச் சென்ற பல விவசாயிகள் அதனைச் சந்தைப்படுத்த முடியாமல் திரும்பக் கொண்டு வரும் நிலை தோன்றியுள்ளது. (அ-133)

# பசுவை ஒரு தொழிற்சாலை...

(5 ஆம் பக்கத் தொடர்)

ஒவ்வொரு கன்று பிறக்கிறது. இரண்டே நாள்களில் கன்றுகள் தாயினின்றும் பிரிக்கப்படுகின்றன. அன்புள்ள உள்ளங்கள் (தாய்ப் பசுக்கள்) கன்றை நினைத்துக் கதறி அழுவதும் வேலியை உடைத்துக் கன்றினை அடையத் துடிப்பதும் கன்றாவிக் காட்சி. உள்ளம் இல்லாதவர் செய்யும் இத்தாய் சேய் பிரிவினையைக் கண்டு கலங்காதவர் யார்? இப்படிப் பெறப்பெற்ற புட்டிப் பாலைத்தான் நாம் எமது தொலைக் காட்சியிலே கண்டு ரசிப்பதோடு அருந்தி ஆறுதலடைகின்றோம்.

## தாய் சேய் பிரிப்பு

கன்றைக் கறவையிலிருந்து பிரிப்பதன் மூலம் தாய்ப்பாலிலிருந்து கிடைக்க வேண்டிய நோய் எதிரிகள் கன்றுக்குக் கிடைப்பதில்லை. இதனால் தாய் வருந்துவதைப் போன்றே கன்றும் நோய் வாய்ப்பட்டு வருந்தும். கறவைப் பசுக்கள் 20—30 ஆண்டுகள் வாழவேண்டியதாயிருந்தும் அவை 7 — 8 வயதிலே இறைச்சிக்காகக் கொல்லப்படுகின்றன. பால் உற்பத்தி குறைவு என்னும் காரணத்துக்காக நல்ல நிலையிலுள்ள பசுக்களும் இறைச்சிக்குப் பலியாகின்றன.

பாற் பண்ணையை அடுத்து சுவையுணவுச்சாலை அமைத்து பசுக் கன்றுகள், நாகு கன்றுகள் சில வெட்டப்படுகின்றன. சில தாயாவதற்காக வளர்க்கப்படுகின்றன. எல்லா ஆண் நாம்பன் கன்றுகளும் வெட்டப்படுகின்றன. அங்ஙனம் வெட்டப்படுவதற்கு முன்னர் அவை ஒரு சுவையுணவு தயாரிப்புத் தனியிடத்துக்கு எடுத்துச்செல்லப்படுகின்றன. கழுத்திலே சங்கிலியிட்டு அசைய முடியாதபடி கட்டி வைத்து விசேடமாகத் தயாரிக்கப்பெற்ற இரும்புச் சத்து நீக்கப் பெற்ற கஞ்சியை நான்கு மாதங்களுக்குப் பருக்குகிறார்கள். வைக்கோலில் சிறிதளவு இரும்புச் சத்து உண்டென்பதால் படுக்கைக்குக் கூட அதனைப் போடமாட்டார்கள்.

இதன் மூலம் அக்கன்றுகளில் இரத்தச் சோகையை உண்டு பண்ணுவர். இரும்புச் சத்து இல்லாமை, அசைவின்மை காரணமாக அக்கன்று வெளுத்த மென்மையான இறைச்சியை உடையனவாகின்றன. வெண் சுவையுணவு பாலுணவை மட்டும் உண்ட கன்றுகளிலிருந்து பெறப்படுகின்றது. கன்றுகள் சிறிதளவு இரும்புச் சத்தையாவது பெற முடியாத வகையில் அவை வாழுமிடத்திலே இரும்பாலான எந்தப்பொருளையும் விடமாட்டார்கள். சிறுநீரைக் கூட அருந்தவிடார்.

நான்கு மாதங்களில் இக்கன்றுகள் மிகக் கடுமையான இரத்தச் சோகை நிலைக்குத் தள்ளப்படுகின்றன. இந்தவிதமான துரோகங்களை பகுத்தறிவுள்ள மனித குலத்தின் சுகபோகங்கள், பால், சுவையுணவு ஆகியவற்றுக்காகத் தொடர்ந்து இழைத்து வரும் பாற்பண்ணையாளரை ஆதரிப்பார் ஜீவ இரக்கமற்ற கொடிய பாவிகளே.

★


# சாவகச்சேரி நகரசபை

## பகிரங்க ஏலவிற்பனை

கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சிக் கடைகள் 01-03-2000 ஆம் திகதி தொடக்கம் 31 — 12 — 2000 ஆம் திகதி வரைக்கான காலப்பகுதிக்கு குத்தகைக்கு எடுத்து நடத்துவதற்கான பகிரங்க ஏல விற்பனைக்கு விடப்படும். ஏல விற்பனை சாவகச்சேரி நகரசபை அலுவலகத்தில் 01 - 03 - 2000 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10-00 மணிக்கு நடைபெறும்.

ஏல விற்பனையில் கடையை எடுத்து நடத்துவோர் கேள்வித் தொகையின் 1/3 பகுதியை முற்பணமாகச் செலுத்துவதுடன் பாதுகாப்பு வைப்புப் பணமாக ரூ 1000 ஐ இவ்வலுவலகத்தில் செலுத்த வேண்டும்.

கேள்வித் தொகையின் மிகுதித் தொகையை எட்டு சம பங்குகளாகப் பிரித்துச் செலுத்த வேண்டும்.

| கடை இல. | ஆரம்பக் கேள்வித் தொகை |
|---|---|
| 01. ஆட்டிறைச்சிக் கடை இல. 1 | ரூ. 55,000-00 |
| 02. ஆட்டிறைச்சிக் கடை இல. 2 | ரூ. 62,000-00 |
| 03. மாட்டிறைச்சிக் கடை இல. 3 | ரூ. 66,000-00 |
| 04. மாட்டிறைச்சிக் கடை இல. 4 | ரூ. 70,000-00 |

மு. செ. சரவணபவ
செயலாளர்
நகரசபை சாவகச்சேரி

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி.
24 - 02 - 2000. (சி/11189)



# ஓயாத துயரில் ஓராண்டு



குரும்பசிட்டி

## அமரர் வ. இராசரத்தினம்

திதி: 27 — 02 — 2000

அன்பின் திருவுருவாய் அரவணைப்பின் அமைவிடமாய்
பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
உள்ளத்தில் தூய்மையாய் ஊர்போற்றும் உத்தமராய்
வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்தீரே வான்மதியாய்
இறைவன் இணையடிதான் இணையிலா இன்பமென்று
பொய்யுலகை மறந்து மெய்யுலகுதான் புகுந்து
ஓராண்டு காலம் ஓடி மறைந்தாலும்
ஆறாது எம்சோகம் ஆண்டவனை இறைஞ்சுகின்றோம்.

சகோதரி - ந. யோகேஸ்வரி,
மருமக்கள்.

உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய். (73964)

# சமய உணர்வு, நல்ல விழுமியங்களை பதிக்கும் செயற்பாடுகள் மிக அவசியம்

## புண்ணியநாச்சியார் தின விழாவில் அதிபர் வலியுறுத்து

நல்லூர், பெப். 27

"இளம்தலைமுறையினரிடையே சமய உணர்வுகளையும் நல்ல விழுமியங்களையும் ஏற்படுத்தக்கூடியதான செயற்பாடுகள் பரவலாக இடம்பெற வேண்டும். பெற்றோர்கள் தமது பிள்ளைகளைச் சமய சம்பந்தமான போட்டிகளில் பங்குபற்றச் செய்து, அவர்களின் ஆற்றலைக் கூர்மைப்படுத்தி சைவத்தின் விழுமியங்களைப் பிள்ளைகள் பேணச் செய்ய வேண்டும்."

—இவ்வாறு யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையினரால் நடத்தப்பட்ட புண்ணிய நாச்சியார் தின நிகழ்வுகளில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசிய சாவகச்சேரி இந்துக்கல்லூரி அதிபர் க. சந்திரசேகரம் கூறினார்.

சைவ பரிபாலனசபையின் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் சபையின் உப தலைவர் சைவப் புலவர் வ. கந்தசாமி தலைமையில் அண்மையில் நடைபெற்ற இந் நிகழ்ச்சியில் அதிபர் சந்திரசேகரம் மேலும் கூறியதாவது:-

"இந்து ஒருவன் பிறப்பினாலேயே சமயவாதியாகிறான். இது இறைவனால் கொடுக்கப்பட்ட கொடை. நமது வாழ்வு நெறியின் எடுத்துக்காட்டு.

சமயப் பணிகள் என்றும் தொடர வேண்டும் என்ற எண்ணத்துடனேயே ஆசிரியர், அதிபர் என்ற முறையில் மாணவ சமுதாயத்துக்கு நாம் கல்வியூட்டுகின்றோம்.

"பாடசாலைக் கல்வி போதாதென்று மாணவர்கள் தனியார் கல்வி நிலையங்களுக்கு அலைகிறார்கள். இதனால் எதிர்காலம் தெளிவற்றதாக அமையலாம். பெற்றோர்கள் சமுதாய மதிப்பின் காரணமாகத் தமது பிள்ளைகள் பொறியியலாளர்கள், வைத்தியர்களாக வரவேண்டும் என்று விரும்புகிறார்கள். பிள்ளைகளின் ஆற்றல், திறமை எது என்பதை அறிந்து அதற்கு வாய்ப்பளிக்கும் கல்வி முறை இப்போது கொண்டுவரப்படுகிறது.

"எமது பிரதேசத்தில் சைவசமய அறிவைப் புகட்டும் பணிகளிலும் தரும கைங்கரியங்களிலும் சைவ பரிபாலன சபை ஆற்றும்பங்கு முக்கியத்துவம் மிக்கதாகும்"— என்றார்.

சைவப் புலவர் கந்தசாமி தமது தலைமையுரையில் கூறியதாவது:—

"இந்த மண்ணில் சைவமும் தரும சிந்தனையும் வாழவேண்டும் என்று விரும்பிய அம்மையார் புண்ணிய நாச்சியார், எதிர்காலத்தை உணர்ந்து தமது சொத்துக்களை சைவபரிபாலன சபைக்கு ஒப்படைத்தார். அவருடைய குறிக்கோள் நிறைவுபெற வேண்டும் என்பதில் சைவபரிபாலன சபை அக்கறை கொண்டுள்ளது. சமய நெறிகளையும் தருமத்தையும் காப்பதில் சைவத் தொண்டர்கள் முன் வரவேண்டும். புண்ணிய நாச்சியாரது தினத்தில் சபை பண்ணிசைப் போட்டிகளை நடத்தி பரிசில்களை வழங்குகிறது. எமது சமயக்கோட்பாடுகளில் மாணவர்கள் சிரத்தை காட்டவேண்டும். இம்முறை 250 மாணவர்கள் போட்டிகளில் கலந்து கொண்டனர்"— என்றார்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாச்சார்ய சுவாமிகள் தமது ஆசியுரையில் கூறியதாவது:—

தாய்மார்களுக்கு தமது பிள்ளைகளைத் தரும சிந்தனையுடையவர்களாகவும் சைவர்களாகவும் வாழப் பழக்கும் பொறுப்பு உண்டு. அதேபோன்று ஆசிரியர்களுக்குசுத்தமான தமிழில் எழுதப்பட்டுள்ள திருமுறைப் பாடல்களை தெளிவாகவும் சொற்களைச் சரியாகப் பயன்படுத்தியும் பாடக் கூடியதாகக் கற்றுக் கொடுக்கும் பொறுப்பு உண்டு.

"நாம் எவ்வாறு தரும நெறிகளைப் பேணவேண்டும் என்பதற்கு புண்ணிய நாச்சியார் என்னும் தாய் எடுத்துக்காட்டாக வுள்ளார்.

"எமது சமயத்தையும் கலாசாரத்தையும் பாதுகாக்கும் பொறுப்பில் சைவ பரிபாலன சபை கணிசமான பங்கு வகிக்கிறது. ஆண்டு தோறும் புண்ணிய நாச்சியாரின் நினைவு தின நிகழ்வுகள் இங்கே இடம் பெறுகின்றன. நாம் தரும சிந்தை மிக்கவர்களாக வாழவேண்டும் என்பதை அது எம் எல்லோருக்கும் நினைவூட்டுகிறது" என்றார்.

"சைவம் வளர்த்த மங்கையர்" என்ற பொருளில் செல்வி சிந்துஜாவும், "அறிவியலும் அருளியலும்", "வாழ்க்கையில் சைவம்" என்ற தலைப்புக்களில் முறையே க. சுதர்சன், சே. துஷ்யந்தன் ஆகியோரும் பேசினார்கள்.

பண்ணிசைப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பிரதம விருந்தினர் சந்திரசேகரம் பரிசில்களையும் சான்றிதழ்களையும் வழங்கினார். (உ-103)

# கண்ணீர் அஞ்சலி

யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (கணக்காய்வு)

திருமதி கோமளா திருநாவுக்கரசு

அவர்களின் அன்பு மகன்

## திருநாவுக்கரசு சுதர்சன்

அவர்களின் திடீர் மறைவுச் செய்தி அறிந்து மிகுந்த துயரடைகின்றோம். பாசமிகு புதல்வனின் பிரிவினால் துயருற்று இருக்கும் குடும்பத்தவர்களின் துயரலைகளில் நாமும் பங்கேற்று எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், பணிப்பாளர்கள்,
பணியாளர்கள்.

யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை
யாழ்ப்பாணம்.

(சி-11206)

# கண்ணீர் அஞ்சலி

யாழ். மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் (கணக்காய்வு)

திருமதி கோமளா திருநாவுக்கரசு

அவர்களின் சிரேஷ்ட புதல்வன்

## திருநாவுக்கரசு சுதர்சன்

அவர்களின் திடீர் மரணச் செய்தி அறிந்து துயரடைகின்றோம். பாசமிகு புதல்வனின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர்,
பணிப்பாளர்கள்,
பணியாளர்கள்.

யாழ்ப்பாணம் ப. நோ. கூ. சங்கம்.
யாழ்ப்பாணம்.

(சி/11205)

# திறப்பு விழா

யாழ்ப்பாணம், பெப். 27

புனரமைக்கப்பட்ட உயரப்புலம் கிராம அபிவிருத்திச் சங்கத் திறப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு இடம்பெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகச் சண்டிலிப்பாய் பதில் பிரதேச செயலர் ஆ. மாசிலிங்கமும் கௌரவ விருந்தினராக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் க. ஸ்ரீபதியும் சிறப்பு விருந்தினர்களாக கிராம அலுவலர் பி. சிவபாதசுந்தரம், சமாதான நீதிவான் சி. கணேசவேல், உதவிக் கல்விப் பணிப்பாளர்களான ஆ. வ. கணேசலிங்கம், வி. இராதாகிருஷ்ணன், கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலைஅதிபர் த. அழகரத்தினம் ஆகியோரும் கலந்து கொள்வர். திறப்புவிழா ந. சிவபாதம் தலைமையில் நடைபெறும். (இ-8)

# இடம் பெயர்ந்த மக்களின் விவரம் சேகரிப்பு

வலி. வடக்கு, பெப். 27

வலி. வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் இருந்து கடந்தகாலங்களில் இடம் பெயர்ந்து வேறு பிரதேச செயலாளர் பிரிவுகளில் வசிப்பவர்கள் பற்றிய விபரங்களை வலி. வடக்கு பிரதேச செயலகம் சேகரித்து வருகின்றது.

இப் பகுதியில் மீளக்குடியேற அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் குடியிருந்தவர்கள் கூட தமது இடங்களுக்குச் செல்லாது வேறு பிரதேச செயலாளர் பிரிவுகளில் இடம் பெயர்ந்தவர்களாக வசித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ-86)

# "யுனெஸ்கோ" போட்டியில் பரிசு பெறும் மாணவர்கள்

உதயன் அனுசரணையுடன் "யுனெஸ்கோ" ஆதரவில் பாடசாலைகள் ஊடாக நடத்தப்பட்ட "கல்வி மூலம் சமாதானம்" கட்டுரைப் போட்டியில் மாதாந்தம் சிறந்த கட்டுரைகளை எழுதியவர்களில் முதல் மூன்று பரிசில்களையும் பெறுவோர், மூவர் கொண்ட சுயேச்சையான நடுவர் குழுவால் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களின் விவரம் வருமாறு:-

1. செல்வி சிந்துஜா சமதர்மபாலன் (மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை, பருத்தித்துறை).
2. செல்வி ப. நிர்சாந்தினி (வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்).
3. செல்வி ச. தர்சிகா (விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம்).

இவர்களில் முதலாம் பரிசு பெற்றவருக்கு 1,250 ரூபாவும், இரண்டாம் பரிசு பெற்றவருக்கு 1,000 ரூபாவும், மூன்றாம் பரிசு பெற்றவருக்கு 750 ரூபாவும் வழங்கப்படும். இவர்களுக்குப் பாராட்டுப் பத்திரங்களும் கிடைக்கும்.

பின்வரும் மூவரும் பாராட்டுப் பத்திரங்களைப் பெறுவர்.

★ தி. ஜெயந்தன் (யாழ். மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்),
★ச. சுபாகரன் (துரையப்பா மகா வித்தியாலயம், கொழும்புத்துறை),
★ செல்வி சி. தர்சிகா மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை, பருத்தித்துறை)

வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசில்களும் பாராட்டுப் பத்திரங்களும் எதிர்வரும்வெள்ளிக்கிழமை— மார்ச் மூன்றாம் திகதி — பிற்பகல் 3.30 மணிக்கு உதயன் கேட்போர் கூடத்தில் இடம்பெறும் வைபவத்தில் வழங்கப்படும். (அ)

# விமானப் பயண அனுமதி பெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம், பெப். 27

யாழ். குடாநாட்டில் இருந்து வெளியிடங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் உதயனில் வெளியாகி வருவது தெரிந்ததே.

பயண அனுமதி வழங்கப்பட்டவர்களின் (இம்மாதம் 26 ஆம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேசசெயலக ரீதியாக வருமாறு:

**சங்கானை**

(136080ஏ).

**யாழ்ப்பாணம்**

(136022ஏ),

**கோப்பாய்**

(133274ஏ), (134034ஏ), (136419ஏ), 135419பி), (136419சி), (136419டி), (136419ஈ), (136716ஏ), (136716பி), (136754ஏ), (136754பி), (136754சி),

**நல்லூர்**

(128067ஏ), (128091ஏ), (128091பி) (128091சி), (928092ஏ), (128311ஏ), (128311பி), (128311சி), (128311டி), (128318ஏ), (128318பி), (128320ஏ), (128325ஏ), (128325பி), (128325சி), (128325டி), (133053ஏ), (134227ஏ), (136020ஏ).

(136021ஏ), (136023ஏ), (136028ஏ), (136036ஏ), (138327ஏ),

**தெல்லிப்பழை**

(136302ஏ),

**உடுவில்**

(134134ஏ), (134134பி), (136303ஏ), (136303பி), (135769ஏ), (135769பி), (135769சி), (135769டி).

# உப-தபாலகம் இடம் மாற்றம்

நாவற்குழி, பெப். 27

இராணுவ நடவடிக்கை காரணமாக கடந்த இரு மாதத்திற்கு மேலாக மூடப்பட்டு இருந்த தனங்களப்பு உப தபாலகம் கடந்த வாரம் முதல் நுணாவில் பகுதியில் தற்காலிகமாக இயங்கி வருகிறது.

இந்த உப - தபாலகத்தில் மாதாந்த உதவிப் பணம், புற்றுநோய் உடையவர்களுக்கு வழங்கப்படும் பணம் ஆகியவற்றை இதற்கான அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (உ-102)

# முன்பள்ளி மாணவர்களின் கலைவிழா

புன்னாலைக்கட்டுவன், பெப். 27

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் இன்று காலை 9 மணிக்கு இடம்பெறும் முன்பள்ளி மாணவர்களின் கலை விழாவுக்கு சன சமூக நிலையங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், இந்து இளைஞர் கழகம் ஆகிய சமூக அமைப்புக்கள் தமது முன்பள்ளி மாணவர்களை உரிய நேரத்திற்கு அனுப்பி உதவுமாறு வலி. மேற்கு சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் கேட்டுள்ளார் (உ-8-133)

# சங்கத்துக்கு லொறி

யாழ்ப்பாணம், பெப். 27

வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு 15 இலட்ச ரூபா செலவில் லொறி ஒன்று கொள்வனவு செய்யப்படவுள்ளதாகவும் —

இதற்கான நிதியைக் கடனாக வழங்க மாகாணசபை முன்வந்துள்ளதாகவும் சங்கத் தலைவர் சு. இசநாயகம் பிள்ளை தெரிவித்தார்.


# வாழ்த்துகின்றோம்

இன்று

அகவை அறுபதில் அகமகிழும்

## கலாநிதி சபா, ஜெயராஜா அவர்கள்

(சிரேஷ்ட விரிவுரையாளர், தலைவர், நுண்கலைப் பிரிவு, யாழ். பல்கலைக்கழகம்)

வாழ்த்திடுமே வான் மேகம் நனைமழைந்து
பாடிடுமே பட்சிகள் உங்களை வாழ்த்தி
வசந்தமே வந்திடும் உங்கள் வாசல் நோக்கி
நெஞ்சில் அன்பு கோடி கொண்டு
வாழ்த்துகின்றோம் அகவை அறுபதிலே
சித்திர வடிவமைப்பு மாணவர் நாமே!

கலைப்பீடம்,
இராமநாதன் நுண்கலைப் பிரிவு,
யாழ். பல்கலைக்கழகம்.

(74005)

# காணாமற்போன தம்பதியரின்....

(7 ஆம் பக்கத் தொடர்)

போனதன் பின் நீங்கள் தேடவில்லையா?' என்பது எமது கேள்வி.

### ராஜபக்ஷவிடம் முறைப்பாடு

''காணாமற் போன அடுத்த நாள் அரியாலை சென்று அங்குள்ள இராணுவ முகாமெல்லாம் அறிவித்தோம். சோமரத்ன ராஜபக்ஷ என்ற சிப்பாயைச் சந்தித்தும் முறைப்பாடு செய்தோம். அவர் 'பாஸ்' என்று சொல்லி ஒரு துண்டு தந்தார். இதைக் காட்டி இராணுவத்தினருக்கு அறிவிக்குமாறு கூறினார்.''

''நாம் எல்லா இடமும் அலைந்து திரிந்தோம். எந்த விதமான பதிலும் கிடைக்கவில்லை.''

''அதனால் இந்த இரு குழந்தைகளையும் என்னுடன் கொண்டுவந்து வைத்திருக்கின்றேன்''— என்றார்.

''நீங்கள் இந்தக் குழந்தைகளைத் திருப்தியாக வளர்க்கிறீர்களா?'' என்று நாம் கேட்டபோது அந்த அம்மாவிடமிருந்து பெருமூச்சு ஒன்று வந்தது.

''நாங்கள் வறிய கூலித் தொழிலாளர்கள். அன்றாடம் தோட்டங்களில் வேலை செய்துதான் சீவிக்கிறோம். சோறோ கஞ்சியோ நாம் சாப்பிடுவதுபோல் அவர்களுக்கும் சாப்பாடு போடுகின்றோம்'' — என்று பதிலளித்தார் சோகமான முகத்துடன்.

''இந்தக் குழந்தைகளை வேறு இடத்திற்குக் கொண்டு சென்று பராமரிப்பதற்கு நீங்கள் அனுமதிப்பீர்களா?'' — என்று கேட்டோம்.

''இவர்கள் வேறுஎங்காவது சென்று வாழ்வது கஷ்டமாகத் தான் இருக்கும். எங்களைப் பிரிந்து ஒருபோதும் இருக்க மாட்டார்கள்.''

''என்றாலும் அவர்களின் முன்னேற்றம் கருதி நீங்கள் இவ்வாறு முயற்சி செய்தால் நாங்கள் அதற்கு ஒத்துழைப்பு வழங்குவோம்.'' — என்று கூறினார்.

''செம்மணியில் மீட்கப்பட்ட பொருள்கள் யாழ். மத்திய கல்லூரியில் பார்வைக்கு வைக்கப்பட்ட போது உங்களது மகளது பொருள்கள் ஏதாவது இருந்தனவா?'' —என்று கேட்டோம்.

''ஆம் அங்கு வைக்கப்பட்டிருந்த பாவாடை மகள் வன்னியில் இருந்து வரும்போது கொண்டுவந்த பாவாடை. அதனையே காணாமற்போன அன்றும் அவர் அணிந்திருந்தார். அங்கு வைக்கப்பட்டிருந்த மூக்குத்தியும் எனது மகளுடையதுதான்'' என்றார் தாய் திருமதி இரத்தினம்.

''காணாமற்போன உங்களது மருமகன் பற்றிக் கூற முடியுமா?'' —என்று கேட்டோம்.

''எனது மருமகன் அரியாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். எனது கணவரின் தங்கையின் மகன்தான் அவர். மகளை விரும்பியே மணம் முடித்தார். அரியாலையிலிருக்கும் முத்தையா பேக்கரியில் அவர் வேலை செய்துவந்தார். எங்களது குடும்பத்துக்கும் அவர் உதவிகள் செய்துவந்தார்'' —என்றார்.

''உங்களது மருமகனும் மகளும் இருந்த வீட்டிற்கு யாராவது அடிக்கடி வந்து போவார்களா?'' — என்று விசாரித்தோம்.

''அப்படி எவரும் வருவதில்லை. மருமகன் வீட்டோடு சேர்த்து சைக்கிள் திருத்தும் கடையும் வைத்திருந்தார். அதனால் இராணுவத்தினர் வந்து சைக்கிள் எடுத்துச் செல்வதுடன் மருமகனுடனும் அன்னியோன்னியமாக இருந்து கதைத்து விட்டுச் செல்வார்கள்'' —என்று கூறினார்.

### எதிர்காலம் கேள்விக் குறியில்

''உங்களது பேரப்பிள்ளைகளின் எதிர்காலத்திற்கு என்ன செய்யப் போகிறீர்கள்?'' என்று கேட்ட போது...

''அவர்களின் எதிர்காலம் கேள்விக் குறியில் தான் நிற்கிறது. தஜீபா தரம் நான்கிலும் பிரகாஷ் தரம் மூன்றிலும் ஊரெழு கணேசா வித்தியாலயத்தில் கல்விபயில்கின்றனர். இவர்களின் எதிர்காலத்துக்கு யாராவது உதவ முன் வந்தால் நாங்கள் ஒரு போதும் தடையாக இருக்க மாட்டோம்'' என்று கூறினார் பேர்த்தியார்.

''நீங்கள் தற்பொழுது வசிக்கும் காணி உங்களுக்குச் சொந்தமானதா?'' என்று கேட்டோம்.

' இல்லை. இது வேறு ஒருவரின் காணி. அவர்களுக்கு நாங்கள் வேலை செய்து கொடுப்போம். அதனால் இங்கே வசித்து வருகின்றோம்''—என்றார்.

''இந்தக் குடிசைக்குள் நீங்கள் எல்லோரும் ஒன்றாக உறங்கக் கூடியதாக இருக்குமா?'' என்று குடிசையைப் பார்த்து விட்டுக் கேட்டோம்.

அதற்கு அவர் ''இல்லை பக்கத்து வீட்டிலும் படுக்கச் செல்வோம்'' என்று கூறினார்

அம்மாவும் அப்பாவும் என்றோ ஒருநாள் வருவார்கள் என்ற எதிர்பார்ப்புடனும் நம்பிக்கையுடனும் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்தச் சிறுசுகள் வளர்ந்து பெரியவர்களானதும் தமது பெற்றோருக்கு நடந்த கொடுமை பற்றி அறியும் போது என்ன பாடுபடப் போகிறார்கள் என்பதை எண்ணிய பொழுது மனம் வேதனையில் மூழ்கியது.

எதிர்காலத்தில் இத்தகைய நிலை எந்த ஒரு குழந்தைக்கும் ஏற்படக்கூடாது என்று சிந்தித்தவாறு ஒரு பெரும் சோகக் கதையை நெஞ்சில் சுமந்தவாறு அந்தச் சின்னஞ் சிறுசுகளிடமிருந்து விடை பெற்றோம்.

கேள்விக்குறியில் நிற்கும் இவர்களின் எதிர்காலத்திற்கு எவராவது உதவ முன் வருவார்களா? ★

# மனித கௌரவத்துக்கான மன்றம் கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப். 27

96 ஆம் ஆண்டு காலப் பகுதியில் கைதாகிக் காணாமற் போனோர் பற்றி தெளிவானதும் உறுதியானதுமான ஒரு பதிலை பாதுகாப்பு அமைச்சிடம் இருந்து பெற்றுத் தருமாறு யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே வி. குகேந்திரனிடம் (ஜெகன்) மனித கௌரவத்துக்கான மன்றம் கோரியுள்ளது.

இது தொடர்பான மகஜர் ஒன்றும் மேற்படி மன்றத்தின் சார்பில் வடபிராந்தியக்கிளை இணைப்பாளர் ஐ. சிவராசாவினால் அவரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: -

இராணுவ நடவடிக்கையினால் கடந்த 96 ஆம், 97 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கைது செய்யப்பட்டவர்கள் பற்றி எதுவித தகவலும் பெற முடியாது உள்ளோர் விடயமே தங்களின் முதலாவது நாடாளுமன்ற உரையில் எடுத்துக் கூறப்பட்டிருந்தது அதற்கு எமது மனமார்ந்த நன்றிகள்.

கைதாகிக் காணாமற் போனோரின் பெற்றோர்கள், உறவினர்கள் படுகின்ற வேதனைகள் பற்றியும் வறுமையால் வாடும் குடும்பங்களின் நிலை பற்றியும் தாங்கள் நேரில் கேட்டு அறிந்து உள்ளீர்கள்.

கைது செய்யப்பட்டவர்கள் முகாம்களுக்கு கொண்டு செல்லப்பட்டனர். இதனை நேரில் கண்ட சாட்சிகள் பிடித்துச் சென்றபடையினரின் விவரங்களைக் கூறியும் விசாரணைக் குழுக்கள் நடவடிக்கை எடுக்க முடியாதுள்ளமை கவலைக்குரிய விடயம் ஆகும்.

எனவே தாங்கள் கைதாகி காணாமற் போனோர் விடயமாக நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரைக்கு அமைய அவர்களின் விடயத்தில் தெளிவான உறுதியான பதிலைப் பாதுகாப்பு அமைச்சின் ஊடாக பெற்றோருக்கும் உறவினர்களுக்கும் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் — என்றுள்ளது. (இ-10)

# அரச ஊழியருக்கு ஆங்கில போதனை

வலி. தென்மேற்கு, பெப். 27

வடக்கு — கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த அரசாங்க ஊழியர்கள் ஆங்கில மொழியில் தேர்ச்சி பெறுவதற்கான ஆங்கில மொழிப் பயிற்சி நெறி வழங்கப்படவுள்ளது.

தொடர்ச்சியாக ஆறு மாதங்கள் நடைபெறவுள்ள பயிற்சியின் 'பின்னர் பரீட்சையில் சித்தியடையும் ஊழியர்களுக்குச் சான்றிதழ் வழங்கப்படும்.

இதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் வடக்கு— கிழக்கு மாகாண முகாமைகள் அபிவிருத்திப் பயிற்சிகள் திணைக்களப் பணிப்பாளர் எம் ஏ. சி. முகைதீன் மேற்கொண்டுள்ளார். (அ - 185)

# மருந்துக்கு தட்டுப்பாடு

நெடுந்தீவு வைத்திய சாலையில் பனடோல் உட்பட நிப்பிடிப்பின், குழந்தைகளுக்கான பென்சிலின் சிறப், அமர்சின் சிறப், பிறிற்ரோன் சிறப், விஷக்கடிகளுக்கான மருந்துவகைகள், பென்சிலின் ஊசி, சலரோகத்திற்கான குளிகைகள், இரத்த அழுத்தத்திற்கான அல்டோமற், பஞ்சு, கிறேப்பன்டேஜ் என்பன வற்றுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது.

இதனால் நோயாளர்கள் தமக்குத் தேவையான மருந்துகளை யாழ். நகரில் கூடுதல் விலைக்கு வாங்கிச் செல்ல வேண்டிய நிலையில் உள்ளனர். (உ-111)

# நோர்வேயின் ஆரம்ப யோசனைகளுக்கு....

(5 ஆம் பக்கத் தொடர்)

கவின் நிலைப்பாடு என்ன? இந்தப் பேச்சுக்களில் ஐ.தே.கவின் பங்களிப்பு என்ன? என்பனவற்றை அறிவதில் நோர்வே அமைச்சர் ஆர்வம் காட்டினார்.

வடக்கு—கிழக்கு தமிழர்கள் தொடர்பான பிரச்சினை நீண்ட காலமாகத் தொடர்கின்றது. இந்தப் பிரச்சினையால் நாடு மோசமான நிலையை அடைந்துள்ளது இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண நோர்வே மேற்கொள்ளும் முயற்சிக்கு எமது ஆதரவு தாராளமாக உண்டு—

இந்தப் பிரச்சினைக்கு அரசியல் முறையிலேயே தீர்வு காணமுடியும். வேறு எந்த வழியாலும் தீர்வு காணமுடியாது. இதுவே எமது நிலைப்பாடாகும் —

அரசியல் ரீதியாகத் தீர்வு காண்பதற்கு மூன்றாந் தரப்பு ஒன்றின் உதவியுடன் அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் பேச்சுக்களை நடுத்த வேண்டும் — அந்தப் பேச்சுக்களில் முக்கிய கட்சிகளில் ஒன்றான ஐ. தே. கவும் இணைக்கப்பட வேண்டும்.

அரசியல் ரீதியான தீர்வினை எட்ட அரசு முன் வைத்துள்ள அதன் அரசமைப்பு யோசனைகள் அடிப்படையாக அமையலாம்—

முதலில் வடக்கு - கிழக்கில் சிவில் நிர்வாகத்தைக் கொண்டுவர இடைக்கால நிர்வாக சபை அமைக்கப்பட வேண்டும். வன்னி உட்பட இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளுக்கு உணவு, மருந்துப் பொருள்களை தாராளமாக அனுப்பவேண்டும் —

இந்த நாட்டில் உள்ள சிறுபான்மை இனத்தவர்கள் மீதான இம்சைகளை நிறுத்த பொலிஸ் மற்றும் படையினருக்கு பணிப்புரைகளை விடுக்கவேண்டும் —

இவ்வாறு செய்வதன் மூலம் வடக்கு — கிழக்கில் சுமுகநிலையைக் கொண்டு வருவதுடன் முதலில் சிறுபான்மையினரின் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவேண்டும் —

அதன் பின்னர் அதிகாரப் பரவலாக்கல் தொடர்பான பேச்சுக்களை ஆரம்பிக்கலாம் — என்று ரணில் விக்கிரமசிங்க நோர்வே அமைச்சரிடம் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவரைச் சந்தித்த பின்னர் வொலேபெக் ஜனாதிபதியைச் சந்தித்து நான்கு மணி நேரம் பேச்சு நடத்தினார். ஜனாதிபதியுடன் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் மங்கள முனசிங்க, வெளிவிவகார அமைச்சு செயலாளர் லயனல் பெர்னாண்டோ ஆகியோர் பங்குபற்றினர்.

புலிகளின் நிலைப்பாடு தொடர்பாக எடுத்துக் கூறிய நோர்வே அமைச்சர், இலங்கையின் கருத்தை அறிய ஆர்வம் காட்டினார்.

விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ள ஆலோசனைகள் தொடர்பாக இலங்கை அரசு அளித்துள்ள பதிலில் பல அம்சங்கள் உத்தியோக ரீதியாக வெளிவராத நிலையில்—

நோர்வே வெளிவிவகார அமைச்சர் அடுத்து வரும் நாள்களில் விடுதலைப் புலிகளை மீண்டும் சந்திக்கவுள்ளார் என்று வெளியாகியுள்ள தகவல்கள் இலங்கை அரசு ''பச்சைக் கொடி'' காட்டியுள்ளதாகவே கருதவேண்டியுள்ளது என்று ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

நோர்வே அமைச்சருக்கும் அரசுக்கும் இடையில் பேச்சுக்கள் நடைபெற்ற சிறிது நேரத்தில் அமைச்சரவை கூடியது. அந்தக் கூட்டத்தில் நோர்வே அமைச்சருடன் நடத்தப்பட்ட பேச்சு விவரங்கள் எடுத்துக் கூறப்பட்டன.

### அரசு முன்னெடுக்கும்

அமைச்சரவை கூடிய பின்னர் கருத்து வெளியிட்ட சிரேஷ்ட அமைச்சர்களான அலவி மௌலானாவும் பட்டி வீரக்கோனும்—

''நோர்வே அமைச்சரின் ஆலோசனைகள் சாதகமானவை. அரசு அவற்றை முன்னெடுக்கவுள்ளது'' என்று கருத்து வெளியிட்டனர்.

இதனடிப்படையில் நோக்கும்போது, அரசின் யோசனைகள் புலிகளின் கவனத்துக்குசமர்ப்பிக்கப்பட்டு அவர்களின் கருத்து அறியப்பட்டு மீண்டும் நோர்வே அமைச்சர் இலங்கை வரவுள்ளார் என்று அறியவருகிறது.

இனப்பிரச்சினைக்குத்தீர்வு காண நோர்வே முன்னெடுத்துள்ள முயற்சிக்குக் கிடைக்கவுள்ள பலாபலன் என்ன? இலங்கை அரசும் — விடுதலைப் புலிகளும் நாட்டுக்கு வெளியே நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் எப்போது பேச்சுக்களை ஆரம்பிக்கப் போகிறார்கள்?

பேச்சுக்களின் ஆரம்பத்தோடு வடக்கு - கிழக்கில் யுத்தம் நிறுத்தப்பட்டு சுமுக நிலை ஏற்படுத்தப்படுமா?

இந்தக் கேள்விகளுக்கு அடுத்து வரும் சில வாரங்களில் பதில் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### அரசும் ஐ. தே. கவும் ஒத்துழைக்கவேண்டும்

நோர்வே ஒரு நடுவு நிலைமை நாடு. உலகில் பல்வேறு நாடுகளில் நிலவிய உள்நாட்டு யுத்தங்களை முடிவுக்குக் கொண்டுவர தனது பங்களிப்பை வழங்கிய நாடு அது. இந்நிலையில் இலங்கை விடயத்தில் தலையிட்டுள்ள நோர்வேயின் முயற்சிக்கு அரசும் விடுதலைப்புலிகளும் ஆதரவு வழங்க வேண்டும். இதன் மூலம் சமாதான சூழ்நிலை உருவாகவேண்டும் என்பதே சகலரின் விருப்பமாகும் —என்று தேசிய சமாதானப் பேரவைச் செயலாளர் ஜெகான் பெரேரா கருத்து வெளியிட்டார்.

இலங்கை அரசும் ஐ. தே. கவும் ஒன்றிணைந்து இந்த முயற்சிக்கு ஆதரவு வழங்கினால் தெற்கில் இயங்கும் பயங்கரவாதத்துக்கு எதிரான அமைப்பு வீரவிதான போன்ற பேரினவாத அமைப்புக்களின் எதிர்ப்புக்கள் பெரிதாக எடுபடாது — என்றும் அவர் சொன்னார்.

நோர்வே அமைச்சர் வந்து சென்ற ஒருசில மணி நேரத்தில் வீரவிதான உட்பட 15 அமைப்புக்கள் நோர்வே தூதரகம் முன்பாக ஆர்ப்பாட்டம்நடத்த முனைந்தன. ஆனால் பொலிஸாரின் துரித செயற்பாட்டினால் அந்த ஆர்ப்பாட்டம் தடுக்கப்பட்டது. மகஜர் ஒன்று கையளிக்க மட்டும் முடிந்தது.

இலங்கை அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை நோர்வேயின் முயற்சிக்கு ஊக்கமளிப்பதாக உள்ளது என்று அவதானிகள்கருதுகின்றனர். ★


## தேவை

அச்சுவேலை பழகிய
அல்லது
பழக விரும்புவோர்
(பெண்கள்)
நேரில் தொடர்பு
கொள்ளவும்.

**திருவள்ளுவர்
அச்சகம்**
593, பருத்தித்துறை வீதி,
(யாழ். மாநகரசபை
அருகில்)
நல்லூர்.
(73988)

## தேவை

வெதுப்பகத்தில் வேலை செய்வதற்கு வேலையாள்கள் தேவை. விரும்புவோர் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

**வரதலக்ஷ்மி
வெதுப்பகம்,**
சுழிபுரம் சந்தி,
சுழிபுரம்.
(73994)

# அரச இலக்கிய விழா

1999ஆம் ஆண்டில் பிரசுரிக்கப்பட்ட சிறந்த தமிழ் நூல்களுக்குப் பரிசளித்தல்

**1999 ஜனவரி 1ஆம் திகதி முதல் 1999 டிசம்பர் 31ஆம் திகதிவரை (இரு தினங்களும் உட்பட) வெளிவந்த நூல்களின் ஆசிரியர்களிடமிருந்து சிறந்த தமிழ் நூல்கள் பரிசுத் தேர்வுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

நூலாசிரியர் இலங்கையராயிருத்தல் வேண்டும். நூல்களை அனுப்ப விரும்பும் ஆசிரியர் இதற்கான விண்ணப்பத்தை நேரில் அல்லது சுயமுகவரியிடப்பட்ட தபாலுறை ஒன்றை *திரு.வீ. விக்கிரமராஜா, செயலாளர், தமிழ் இலக்கியக்குழு, இந்து சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம், 98, வோட் பிளேஸ், கொழும்பு - 07* என்ற முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

பரிசுத் தேர்வில் பங்குகொள்ள விரும்புவோர் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்துடன் நூலின் ஐந்து பிரதிகளை அஞ்சல் மூலம் அனுப்பி வைக்குமாறு அல்லது நேரடியாகக் கையளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

2000ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17ஆம் திகதி விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளும் கடைசித் திகதி ஆகும்.

2000ஆம் ஆண்டு மே மாதம் 05ஆம் திகதி விண்ணப்பங்களுடன் நூல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினமாகும் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

இந்துசமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம்,
98, வோட் பிளேஸ்,
கொழும்பு - 07.
07.02.2000

ஆர்.சிவகுருநாதன்,
தலைவர்,
தமிழ் இலக்கியக் குழு,
இலங்கைக் கலைக்கழகம்.

(C/11207)

# பதவி வெற்றிடங்கள்

1. COMPUTER OPERATOR
2. INSTRUCTOR

மேற்படி பதவிகளுக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள் தங்கள் தராதரத்தை நிரூபிக்கும் ஆவணங்களின் பிரதிகளுடன் தங்கள் சுயவிவரத்தினையும் இணைத்து *03.03.2000க்கு* முன் அனுப்பிவைக்கவும்.

- அதிபர் -

***The Express Institute***
Irupalai, Kopay.

(74004)

# பிரதேச செயலக மெய்வல்லுநர் போட்டி

யாழ்ப்பாணம்,பெப்.27

யாழ்.பிரதேச செயலகப் பிரிவில் பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டிகளில் ஒரு பகுதி இன்று காலை 7 மணிமுதல் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

ஆண், பெண் ஆகிய இருபாலாருக்கும் 10ஆயிரம் மீற்றர் ஓட்டம், தட்டெறிதல், முப்பாய்ச்சல், ஈட்டி எறிதல் ஆகிய நிகழ்வுகளே இன்று நடைபெறவுள்ளன (இ-4)

# கிரிக்கெட்

கராச்சி,பெப்.27

இலங்கை - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையே நேற்று பாகிஸ்தான் ராவல்பிண்டியில் ஆரம்பமான கிரிக்கெட் டெஸ்ட்டின் முதல் இன்னிங்ஸில் பாகிஸ்தான் அணி தனது சகல விக்கெட்டுக்களையும் இழந்து 182 ஓட்டங்களைப் பெற்றது.

தொடர்ந்து ஆடிய இலங்கை அணி ஆட்டநேர இறுதியில் 2 விக்கெட்டுக்களை இழந்து 58 ஓட்டங்களைப் பெற்றது. (இ-4)

* * *

மும்பாய்,பெப்.27

இந்திய - தென்ஆபிரிக்க அணிகளுக்கு இடையில் மும்பாயில் நடைபெற்றுவந்த 'பெப்ஸி' கிண்ணத்துக்கான முதலாவது டெஸ்டில், நேற்று மூன்றாம் நாள் ஆட்டத்துடனேயே தென்ஆபிரிக்க அணி 4 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

ஸ்கோர் விவரம்:-
இந்தியா : 255 - 113
தென்ஆபிரிக்கா : 176 - 164/6
(இ-4)

* * *

கிறைஸ்சேர்ச்சில்,பெப்.27

ஆஸ்திரேலிய - நியூஸிலாந்து அணிகளுக்கு இடையே நேற்று நியூஸிலாந்தின் கிறைஸ்சேர்ச்சில் நடைபெற்ற நான்காவது சர்வதேச ஒரு நாள் போட்டியில் ஆஸ்திரேலிய அணி 48 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. (இ-4)


*நீங்கள் வாங்கும் பொருள் தரமானதா?*

**உங்கள் பணத்திற்கு நாங்கள் உத்தரவாதம் தருகின்றோம்.**

**உங்களுக்குத் திருப்தி இல்லையெனில் முழுப்பணத்தையும் மீளப்பெறும் வசதியோடு வருகின்றன!**

**KOBE**

அன்டனாக்களும் பூஸ்டர்களும்

**இலங்கையில் விற்பனையில் முதலிடம் வகிக்கும் தரமான பொருள்கள்**

உங்களுக்கு அபிமான தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை தங்கு தடையின்றி தெட்டத் தெளிவாகப் பார்த்து மகிழ வேண்டுமா?

*கவலை வேண்டாம்!*

*இப்போது!*

32 வெவ்வேறு வடிவங்களில் அன்டனாக்களும், 21 வடிவங்களில் பூஸ்டர்களும்

**இலங்கையில் எப்பாகத்திலும் பாவனைக்குகந்த தரத்துடன் கிடைக்கின்றது.**

**LANKA NIPPON**

No. 18, Keyzer Street, Colombo - 11
Tel: 437735 Fax: 437736
No. 10, Trelawny Place,
(Behind Milk Bar)
Bambalapitiya Junc, Colombo - 4
Tel: 589992

**'KOBE தரத்தின் சின்னம்'**

(C/10933)


# வாழ்த்துகின்றோம்

கல்வியியல் முதுமாணிப்பட்டம் பெற்ற எமது விரிவுரையாளர்

**திருமதி அனுஷியா சத்தியசீலன்**

அவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*பகுதி நேர பட்டப்பின் கல்வி டிப்புளோமா ஆசிரிய மாணவர்.*

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். (C/11213)

# வாழ்த்துகின்றோம்

இன்று (27.02.2000) மணிவிழாக் காணும்
எமது சிரேஷ்ட விரிவுரையாளர்
(கல்வியியற் பீடம்)
கலாநிதி சபா ஜெயராஜா அவர்களை
மேலும் பல்லாண்டு காலம்
சீரும் சிறப்பும் மிகுந்து
வாழ வாழ்த்துகின்றோம்.

*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*
பகுதிநேர பட்டப்பின் கல்வி டிப்புளோமா ஆசிரிய மாணவர்

(C/11214)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 07-02-1950
மறைவு 27-01-2000

**திருமதி சகுந்தலாதேவி இராசேந்திரன்**
திதி: 27.02.2000

**எமது முன்னாள் வடபிராந்திய பிரதிப் பொதுமுகாமையாளரும் தற்போதைய மேலதிகப் பொதுமுகாமையாளருமாகிய (கொழும்பு) திரு. வேலுப்பிள்ளை இராசேந்திரன் அவர்களின் பாசமிகு துணைவியாரின் 31ஆம் நினைவு நாளில் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

மத்திய மின்சாரநிலைய
மின் பொறியியலாளர்,
உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்.

(74023)

# கண்ணீர் அஞ்சலி

யாழ்.மாவட்ட
கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்
திருமதி கோ.திருநாவுக்கரசு (கணக்காய்வு) அவர்களின்
அன்புமகன்

## அமரர் திருநாவுக்கரசு சுதர்சன்

அவர்களின் திடீர் மறைவால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**தலைவர், பணிப்பாளர்கள், பணியாளர்கள்,**
யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சிக்கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்.

111, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

(C/11208)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி திருநாவுக்கரசு இரத்தினம்மா

தாவடியைச் சேர்ந்த திருமதி திருநாவுக்கரசு இரத்தினம்மா நேற்று (26.02.2000) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.02.2000) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரின் தாவடி இல்லத்தில் நடைபெற்று தாவடி மயானத்தில் இறுதி மரியாதை செலுத்தப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தாவடி.

தகவல்:
ஜெயசிங்கம் திலகவதி
(மகள்)

(74083)

## கனகசபை (வேவியர்) நித்தியானந்தன் (ஆனந்தன்)

(இரும்புத்தொழிற்சாலை உரிமையாளர் - இராசவீதி, கோப்பாய்)

மாவிட்டபுரம் மடத்தடியைப் பிறப்பிடமாகவும், நீர்வேலி வடக்கைத் தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட கனகசபை நித்தியானந்தன் (ஆனந்தன்) நேற்றுமுன்தினம் (25.02.2000) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் ஸ்ரீதேவியின் அன்புக்கணவரும், மதுரிகா, மயூரதி, வைஷ்ணவன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற கனகசபை தம்பதிகளின் மகனும், காலஞ்சென்றவர்களான தம்பியையா (சிறுவிளான்) செல்வநாயகம், சின்னையா ஆகியோரின் பெறாமகனும், வேலணை கந்தசாமி ஆச்சாரி தம்பதிகளின் மருமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.02.2000) ஞாயிற்றுக்கிழமை நீர்வேலி வடக்கில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நி. ஸ்ரீதேவி
(மனைவி)

காமாட்சி அம்பாள் கோவிலடி,
நீர்வேலி.

(74031)

'வாழ்வளிக்கும் வார்த்தையில் ஒன்றிப்போம்'

திருச்சபையின் ஆயர்கள் கலந்துகொள்ளும்

**ஒன்றிப்பு வழிபாடு**

இடம்: பரியோவான் கல்லூரி
பீற்றோ மண்டபம்

காலம்: 29.02.2000 செவ்வாய்க்கிழமை
பி.ப. 3.30 ~ 5.30

**நிகழ்ச்சி நிரல்**

3.30 * பாடல் - ஆயர்கள் ஒளியேற்றல்
* பாடலும் பிரார்த்தனையும் - அங்கிலிக்கன் சபை
* நற்செய்தி நூல்களூடாக "ஒன்றிப்பு" ஆயர் கெனத் பெர்னான்டோ
* பாடலும் பிரார்த்தனையும் - இரட்சணியசேனை
* பாடலும் பிரார்த்தனையும் - கத்தோலிக்க சபை
* திருத்தூதர் பணி நூலூடாக "ஒன்றிப்பு" ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம்
* பாடலும் பிரார்த்தனையும் - தென்னிந்திய சபை
* திருமுகங்களூடாக "ஒன்றிப்பு" ஆயர் சு. ஜெபநேசன்
* பாடலும் பிரார்த்தனையும் - மெதடிஸ்த சபை
* பாடல்
5.30 * ஆசீர்வாதம்

அனைவரையும் அன்பாக அழைக்கின்றோம்

| | |
|---|---|
| அருள் பிதா ஜே.ஈ.ஜெயசீலன் | அருள் பிதா ஏ.ஏ.போல் |
| தலைவர் | தலைவர் |
| ஒன்றிப்பு ஆணைக்குழு | யாழ். கிறிஸ்தவ ஒன்றியம் |
| யாழ். மறைமாவட்ட ~ கத்தோலிக்க திருச்சபை. | (74032) |


## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் நிர்மூலமாக்கப்பட்டன என்றும்-

அவற்றில் வேம்பியடிக்குளம் முகாம் மீதான தாக்குதலில் மூன்று புலி உறுப்பினர்கள் உயிரிழந்தனர் என்றும் -

துப்பாக்கிகள், கிளைமோர் குண்டுகள் உட்பட பல ஆயுதங்களை படையினர் கைப்பற்றினர் என்றும் - மேலும் தெரிவிக்கப்பட்டது.

கஞ்சிகுடிச்சாறு பிரதேசத்தில் உள்ள புலிகளின் முகாம்களை அழித்தொழிக்கும் நோக்குடனேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டதாகவும் கூறப்பட்டது.

(இ-6-5)

## தமக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரத்துக்கள் நேற்று துண்டிக்கப்பட்டன.

இதனை அடுத்து உப்புவெளி உதவிப்பொலீஸ் இன்ஸ்பெக்டர் ரணவீர திருகோணமலை சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் திருகோணமலை பிரதேச செயலர் எஸ்.வேலும்மயிலும், கடற்படை உயர்அதிகாரி, திருகோணமலை ஈ.பி.டி.பி. பிரதிநிதிகள், பாதிக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகள் ஆகியோரை உள்ளடக்கிய மாநாடு ஒன்றைக் கூட்டினார்.

இம்மாநாட்டில் பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்திய மற்றும் உடைமைகளுக்கு சேதம் விளைவித்த படையினர் மீது நடவடிக்கை எடுப்பது என்றும் -

சேதமான வீடுகளுக்குப் பதிலாக தற்காலிக குடிசைகள் அமைத்துக் கொடுப்பது என்றும் -

இச்சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்கள் அனைவருக்கும் நிவாரணம் வழங்க ஏற்பாடு செய்யப்பட வேண்டும் என்றும் - தீர்மானிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் தமது முறைப்பாடுகளை பதிவுசெய்வதற்கு வசதியாக உப்புவெளி பொலீஸ் நிலையத்தில் விசேட கருமபீடம் ஒன்றை திறப்பதெனவும் முடிவு செய்யப்பட்டது.

இதனை அடுத்து போராட்டம் நடத்தியவர்கள் கலைந்து சென்றனர்.

(இ-5)


யாழ். ஹற்றன் நஷனல் வங்கியின்

ஆதரவுடன்

யாழ். இந்துக் கல்லூரி சதுரங்கக் கழகம்

நடத்தும்

பாடசாலை தனிநபர், அணிகளுக்கிடையிலான வருடாந்த (7ஆவது)

**சதுரங்கச் (CHESS) சுற்றுப்போட்டி 2000**

மேற்படிப் போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் பாடசாலைகள் 16 வயதுக்கு மேற்பட்ட, 16 வயதிற்கு உட்பட்ட ஆண்கள் அணி', பெண்கள் அணி' என்பவற்றிற்கு 6 வீரர்களையும் 1 பதில் வீரரையும் கொண்ட விண்ணப்பத்தினையும் 14 வயதுக்குட்பட்ட, 12 வயதுக்குட்பட்ட ஆண்கள், பெண்கள் தனிநபர் போட்டிக்கு ஒரு பாடசாலையிலிருந்து ஒவ்வொரு பிரிவிற்கும் ஐந்து வீரர்களுக்கு மேற்படாத விண்ணப்பத்தினையும் தங்கள் பாடசாலை அதிபரூடாக,

அதிபர்,
யாழ். இந்துக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

எனும் விலாசத்திற்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ 10.03.2000 வெள்ளிக்கிழமைக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நன்றி

குறிப்பு:
1. 14.03.2000 செவ்வாய்க்கிழமை மு.ப. 9.00 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் போட்டிகள் ஆரம்பமாகும்.
2. 25.03.2000 சனிக்கிழமை மு.ப. 9.00 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் பரிசளிப்பு விழா கலை நிகழ்ச்சிகளுடன் நடைபெறும்.
3. போட்டிகள் ஆரம்பிக்கும் தினமாகிய 14.03.2000இல் வயது கருதப்படும்.
4. எல்லாப் போட்டிகளும் ஒரே நேரத்தில் நடைபெறுவதால் ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட போட்டிகளில் பங்குபற்றமுடியாது.
5. விண்ணப்பங்கள் முடிவுதிகதிக்குப் பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
6. ஒரு பாடசாலையிலிருந்து ஒரு பிரிவிற்கு ஒரு அணி மட்டும் பங்குபற்றலாம்.
7. 12, 14 வயதுக்குட்பட்ட ஆண்கள்/பெண்கள் தனிநபர் போட்டிக்கு ஒரு பாடசாலையில் இருந்து ஒவ்வொரு பிரிவுக்கும் 5 வீரர்களுக்கு மேல் பங்குபெற இயலாது. (Maximum 5 members in a group)
8. மேலதிக விவரங்களுக்கு யாழ். இந்துக் கல்லூரி சதுரங்கக் கழகத்துடன் அல்லது யாழ். ஹற்றன் நஷனல் வங்கியுடன் தொடர்பு கொள்ளவும்.

| | |
|---|---|
| யாழ். ஹற்றன் நஷனல் வங்கி, யாழ்ப்பாணம். | அதிபர், யாழ். இந்துக் கல்லூரி. |

24.02.2000 (C/1188)


# மிரட்டல் சம்பவத்தை அடுத்து

# புறக்கோட்டை வர்த்தகர்கள் மூவர் நேற்று கைதாகி விடுவிப்பு

## பொலீஸார் தீவிர பாதுகாப்பு நடவடிக்கை

கொழும்பு புறக்கோட்டைப்பகுதி வர்த்தகர்கள் பாதாள உலகக் கோஷ்டியினரால் மிரட்டப்பட்ட சம்பவம் தொடர்பாக பாதாள உலகக் கோஷ்டியுடன் தொடர்புடையவர்கள் என்று நம்பப்படும் மூன்று வர்த்தகர்கள் நேற்றுக் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட பின்னர் விடுவிக்கப் பட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் 10 பேர் விரைவில் கைது செய்யப்படுவர் என்றும் -

இவர்களில் மூவர் ஏற்கனவே அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்றும் சி.ஐ.டி. பணிப்பாளர் பந்துல விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இந்தியா மற்றும் பாகிஸ்தானில் இருந்து புறக்கோட்டை வர்த்தகர்கள் வெங்காயம், உருளைக்கிழங்கு ஆகியவற்றைக் கொள்வனவு செய்யக்கூடாது என்று பாதாள உலகக் கோஷ்டியுடன் இயங்கும் சில வர்த்தகர்கள் எச்சரிக்கை செய்ததும் -

இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் வர்த்தகர்கள் நேற்று முன்தினம் கடையடைப்புப் போராட்டம் நடத்தியதும் - தெரிந்ததே.

நேற்று நிலைமை வழமைக்குத் திரும்பியது. அப்பகுதியில் இரவு பகலாக பொலீஸார் ரோந்துப் பணிகளில் ஈடுபட்டுவருகின்றனர்.

(இ-6-5)

## புலிகளுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களுக்கே அளிப்பேன் என்றும் அவர் கூறினார்.

தீர்வுக்கு தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாக புலிகளைக் கொள்ள வேண்டுமாயின் அதற்கு நாம் தடையாக இருக்கமாட்டோம் என்று தெரிவித்த புளொட் அமைப்பின் தலைவரும் வன்னி மாவட்ட எம்.பியுமான த.சித்தார்த்தன் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு நியாயமான தீர்வு கிடைக்கவேண்டும் என்பதே தமது நிலைப்பாடு என்று சொன்னார்.

ரெலோ அமைப்பின் தலைவரும் வன்னி மாவட்ட எம்.பியுமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்ததாவது:-

இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் தமிழ் இனத்தின் சார்பில் புலிகளுடன் மட்டும் பேசுவதில் எமக்கு ஆட்சேபனை இல்லை. எமது இனத்தின் சார்பில் பேச்சு நடத்தப்பட வேண்டியதும் புலிகளுடனேயே என்று கூறினார்.

புலிகள் ஜனநாயகச் சூழ்நிலையை அங்கீகரிப்பார்களானால் அவர்களுடன் அரசு பேசுவதில் எமக்கு எந்தக் கருத்து வேறுபாடும் இல்லை என்று சுரேஷ் பிரேமச்சந்திரன் குறிப்பிட்டார்.

போரை முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமானால் புலிகளுடன் மட்டுமே அரசு பேசவேண்டும். ஆனால் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் விடயத்தில் புலிகளுடன் மட்டுமன்றி சகல தரப்புடனும் பேச வேண்டும் என்றார் ஈ.பி.டி.பி. அமைப்பின் செயலாளர் நாயகமும் யாழ். மாவட்ட எம்.பியுமான டக்ளஸ் தேவானந்தா.

(இ-6)

## புலிகளின் ஆதர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பது தொடர்பான ஐ.தே.க.வின் யோசனைகள் 1997, 1998ஆம் ஆண்டுகளில் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என்றும் ரணில் தனது கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளார்.

(இ-6)

## பொது மன்னிப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று நள்ளிரவுக்கு முன்னர் சரணடையும் படையினருக்கு எந்தவித தண்டனையும் வழங்கப்படமாட்டாது. என்றும் -

அவர்கள் இராணுவத்தை விட்டு தப்பியோடியபோது வகித்த பதவிகளிலேயே மீண்டும் சேர்த்துக் கொள்ளப்படுவர் என்றும் - நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

(இ-6)

## புதன்கிழமை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலை மீனவர் சங்கப் பிரதிநிதிகள் குருநகர் இறங்குதுறைக்கு அழைக்கப்பட்டு அவர்களுக்கு கடற்படையினரால் மீன்பிடிக்க அனுமதிக்கப்படும் எல்லைகள் காண்பிக்கப்படும். எல்லைகளில் கொடிகளும் போடப்படும்.

அதேசமயம் மீனவர்கள் நாளை திங்களன்று இந்த எல்லைக்குள் உள்ள தமது வலைகள், கம்புகள் மற்றும் மீன்பிடி உபகரணங்களை கரைக்கு கொண்டுவருவதற்கு அனுமதிக்கப்படும். காலையில் ஆள் தெரியக்கூடிய நேரத்தில் இருந்துமாலை 4.00 மணிவரை இந்தக் குறிப்பிட்ட எல்லைக்குள் மீன்பிடிக்க அனுமதிப்பது என்று நேற்றைய மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது.

இந்தக் குறிப்பிட்ட எல்லைக்குள் மீன்பிடிப்பதில் மீனவர்களுக்கு இடப் பிரச்சினை இருக்குமானால் அவர்களை தீவுப்பகுதிக் கடலில் மீன் பிடிக்க அனுமதிப்பது குறித்து ஆலோசிக்கமுடியும் என்றும் தீவுப் பகுதி கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளை தமது அலுவலகத்துக்கு அழைத்து இது குறித்து தாம் கலந்தாலோசிக்க முடியும் என்றும் கே.வி.குகேந்திரன் தெரிவித்தார்.

மீனவர் பிரதிநிதிகளை படை அதிகாரிகள் அடிக்கடி சந்தித்து அவர்களது பிரச்சினைகளைக் கேட்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் -

கரையோரப் பகுதிகளில்உள்ள பிரச்சினைகளை அந்தந்தப் பகுதியில் உள்ள இராணுவமுகாம் பொறுப்பதிகாரிகளே ஆராய வேண்டுமே தவிர சாதாரண சிப்பாய்கள் ஆராய அனுமதிக்கக் கூடாது என்றும் - குகேந்திரன் மேலும் கேட்டுக் கொண்டார்.

இதனை அடுத்து மாதத்தில் முதலாவது வியாழக்கிழமைகளில் இப்படியான சந்திப்பை நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது.

மீன்பிடித் தடையால் பாதிக்கப் பட்டுள்ள மீனவர் குடும்பங்களைச் சேர்ந்த பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கும் இடம் பெயர்ந்து பாதிக்கப்பட்டுள்ள மீனவர் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கும் 10 லட்சம் ரூபா பெறுமதியான புத்தகங்கள், கொப்பிகள் மற்றும் கல்வி உபகரணங்களை வழங்கியுள்ளதாகவும் குகேந்திரன் தெரிவித்தார்.

(இ-51-173)


மிலேனிய ஆண்டில்
அகவை ஒன்று
(ஆயுஷ் ஹோமம்)

மலேசியா - சிரம்பான் சந்தானகோபாலக்குருக்கள் - வைதேகி தம்பதிகளின் சீமந்த புத்திரன் சிரஞ்சீவி

**ஷைலேந்திர சர்மா**

தனது 1ஆவது பிறந்ததினத்தை இன்று (27.02.2000) ஞாயிற்றுக்கிழமை சித்தன்கேணியில் கொண்டாடுகின்றார். ஷைலேந்திரனை சகல செல்வங்களும் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ்க என மனதார வாழ்த்துகின்றோம்.

ஸ்ரீ. சா. வாசுதேவசர்மா
ஸ்ரீ. சா. உமாபதிசர்மா

சிவன்கோயில்,
சித்தன்கேணி.

(74013)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27-02-2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.